

நச்சு வாயு
பரல் வீசி
சிரியாவில்
தாக்குதல்

பக். 14-15


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 253 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 21, வெள்ளிக்கிழமை 05.08.2016


## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அச்சமின்றி கற்றலைத் தொடரலாம்

### மாணவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு முழுமையாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. எந்தவித அச்சமும், சந்தேகமுமின்றி மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.
இவ்வாறு மாணவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
யாழ். பல்கலைக்கழகத்தின் பக். 24

## அரச அலுவலர்கள் மாறவேண்டும்

### யாழ். செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5
அரச அலுவலர்கள் தரும் தரவுகளில் நம்பகத்தன்மையில்லை. அவர்கள் களப் பயணம் செய்யாது அலுவலகத்தில் இருந்தபடியே தரவுகளைத் திரட்டுவதுதான் அதற்குக் காரணம். ஆனால் அது தவறு. அரச அலுவலர்கள் அதனைக் கட்டாயம் மாற்றிக் கொள்ளவேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.
மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி செய்யும் சேவையில் அவர் இப்படித் தெரிவித்தார். [விரிவு: பக் 08]

## சுகாதாரப் பிரதிப் பணிப்பாளருக்கு மல்லாகம் நீதிமன்றம் பிடியாணை

### தண்ணீரில் ஒயில் கலந்த வழக்கில் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 5
சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்ததான வழக்கில், நடுவண் அரசின் சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரதிப் பணிப்பாளரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது.
குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. முன்னர் சுகாதார அமைச்சு 30 கிணறுகளின் தண்ணீர் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்திருந்தது. ஆனால் அது பற்றிய அறிக்கை எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று சுகாதார வைத்திய அதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.
அதன் பின்னர் பிடியாணை பக். 25

## அடுத்த வாரம் கொழும்பு வருகிறார் ஐ.நா. நிபுணர்

கொழும்பு, ஓக. 5
சிறுபான்மை விவகாரங்கள் தொடர்பிலான ஐ. நாவின் சிறப்புப் பிரதிநிதி ரிடா இசாக், அடுத்த வாரம் இலங்கைக்கு வருகிறார்.
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் ரிடா இசாக் முன்வைத்த சிறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் பல பிழையானவை என இலங்கை அரசு தெரிவித்திருந்தது.
இந்த அறிக்கை அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் அளிக்கும் வகையில் அமைந்ததாக இலங்கை தெரிவித்தது.
எனினும், ரிடா இசாக்கை வரவேற்பதாக இலங்கை அரசு அறிவித்தது. நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு ஐ. நா. சிறப்புப் பிரதிநிதியின் நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக அரசு தெரிவித்தது.(வ-5)

# சர்வதேச விசாரணையேதான் வடக்கு மக்களின் கோரிக்கை

### மக்கள் கருத்தறியும் செயலணியின் செயலாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 5
முற்று முழுதாக பன்னாட்டுப் பொறிமுறையிலான விசாரணையே வடக்கு மக்களின் கோரிக்கையாக உள்ளது. உள்ளக விசாரணையில் அவர்களுக்குசிறிதளவேனும் நம்பிக்கையில்லை. இந்த நிலைப்பாட்டை போர்க்குற்ற விசாரணையை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் காணாமற்போனோர் அலுவலகத்தை எவ்வாறு நிறுவுவது தொடர்பில் மக்கள் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணியிடம் வடக்கு மக்கள் திட்டவட்டமாக எடுத்துரைத்தனர்.
இவ்வாறு 'உதயன்' பத்திரிகைக்கு நேற்றுத் தெரிவித்தார் மக்கள் கருத்தறியும் செயலணியின் செயலாளரும் மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.
மக்கள் கருத்தறியும் செயலணி, வடக்கில் மக்கள் கருத்துக்களைக் கோரும் பணியை கடந்த 25ஆம் பக். 24

> "போர்க்குற்ற விசாரணையில் வழங்கப்படும் சாட்சியங்களின் நம்பகத் தன்மை பேணப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை வடக்கு மக்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றனர்."

## முச்சந்தி முரளி



இதையே உங்கள் பரிந்துரை ஆகவும் இருக்க வேண்டும்

## ரயில் கடவைக்கு பாதுகாப்புக் கேற் அமைக்கக் கோரி மக்கள் போராட்டம்

### ரயில் மோதி குடும்பத்தலைவர் உயிரிழந்ததை அடுத்து





யாழ்ப்பாணம், ஓக. 5
மல்லாகத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடந்த, காதுகேட்கும் திறன் இழந்ததாகக் கூறப்படும் குடும்பத்தலைவரை ரயில் மோதியதில் உடல் சிதறி அவர் உயிரிழந்தார். அதனால் கடவைக்கு பாதுகாப்புக் கேற் அமைக்குமாறு கோரி ஊரவர்கள் ஒன்று சேர்ந்து ரயிலை மறித்து தண்டவாளத்திலிருந்தவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனால் நேற்றுப் பிற்பகல் அங்கு பரபரப்பு நிலவியது.
உயிரிழந்தவரது மகள் தற்போது இடம்பெறும் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும் நிலையில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.
மல்லாகம் - கோட்டைக்காடு சந்தியில் நேற்றுமதியம் விபத்து இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் சிவசங்கரன் (வயது 49) என்பவரே உயிரிழந்தார். அவருக்குக் காது கேட்கும் திறன் குறைவு என்று ஊரவர்கள் தெரிவித்தனர். கடுகதி ரயில் வந்ததை அவர் கவனிக்காது பக். 24

## மன்னார் மர்மக் கிணற்றின் நேரடி விசாரணை நிறைவு

### மீட்கப்பட்ட தடயப்பொருள்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைப்பு

மன்னார், ஓக. 5
திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழிக்கு அருகிலுள்ள மர்மக் கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட மண்ணில் நேற்று இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தடயப்பொருள்கள் இருக்கவில்லை என்று மன்னார் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.ராஜபக்ச தெரிவித்தார். பக். 23


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர்

ரூ. 1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.50% (AER 6.70%) முதல் 9% (AER 9.38%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகள் உண்டு.
DFCC வங்கி பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 14 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா பேசாலையில் சிக்கின

மன்னார், ஓக. 5
பேசாலையில் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான 14 கிலோ 550 மில்லி கிராம் கேரளக் காஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைப் பேசாலைப் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.



மன்னார்- பேசாலை முதலாம் வட்டார கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு அவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பேசாலைப் பொலிஸ் நிலையத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் சசிக்குமாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸின் ஆலோசனைக்கு அமைவாக, பேசாலைப் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.ஜெயரூபன் தலைமையில் சென்ற பொலிஸ் அதிகாரிகள் அங்கு தேடுதல் நடத்தி கஞ்சாப் பொதிகளை மீட்டனர். அவற்றை விற்பனைக்காக கொண்டுசென்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரையும் கைது செய்தததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இளைஞன் பேசாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் மன்னார் நீதிவான் மன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பேசாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,56)

# ஒளிப்படப் பத்திரிகையாளர் ரட்ணத்தின் பூதவுடல் நேற்றுத் தீயுடன் சங்கமம்

உதயன் பத்திரிகையின் ஒளிப்படப் பத்திரிகையாளர் கந்தையா ரட்ணத்தின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது.



அவரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றது. இதில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த கந்தையா ரட்ணம் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை அவர் உயிரிழந்தார். இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், ஊடகவியலாளர்கள் ஆகியோர் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதி அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (வ-5)

# பஸ் நடத்துநருடன் வாக்குவாதப்பட்டவர் பொலிஸில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை சென்ற இ.போ.ச. பஸ்ஸில் நடத்துநருடன் இளைஞன் ஒருவர் மதுபோதையில் குழப்பம் விளைவித்தார்.
அவரைச் சகபயணிகளும் நடத்துநரும் சேர்ந்து பிடித்து அச்சுவேலிப் பொலிஸில் ஒப்படைத்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றது.
மதுபோதையில் பஸ்ஸில் பயணித்த குறித்த இளஞன் பயணசீட்டினை பெற்றுவிட்டு பணத்தைக் கொடுக்காமல் நடத்துநருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்ததாகப் பொலிஸில் நடத்துநரால் முறைப்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-107)

# நுண்கடன் வழங்கும் திட்டம் வடக்கில் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 5
வடக்கின் 5 மாவட்டத்திலும் உள்ள 34 பிரதேச செயலாளர் பிரிவிலும் தலா ஒரு கிராம அலுவலர் பிரிவினைத் தெரிவு செய்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அமைப்பின் ஊடாக நுண்கடன் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அனைத்துக் குடும்பங்களும் இந்தக்கடன்திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.
இதற்கான கிராமங்களைத் தேர்வு செய்து வழங்குமாறு மாவட்டச் செயலாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்களிடம் ஊடாக இந்தத் திட்டத்துக்கான இடத் தெரிவுகளை முன்னெடுத்துள்ளனர். இதற்கான ஆரம்பக் கட்டப்பணிகள் விரைவில் ஆரம்பமாகி முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர். (வ-101)

# ஆடிப்பூர சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை, ஓக. 5
வட்டுக்கோட்டை -தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆடிப் பூர சங்காபிஷேகம் இடம்பெறுகிறது.
காலை 7 மணிக்கு சங்குபூஜை, விசேட ஹோமம் பூர்ணாகுதி, தீபாராதனையைத் தொடர்ந்து சங்காபிஷேகம் இடம்பெறும். மாலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் உற்சவம் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து சுவாமி பூந்தண்டிகையில் வீதியுலா வருவார். (வ)

# இந்திய மீனவர் படகுகள் விடுவிப்பு; சட்டமா அதிபரே முடிவெடுப்பார்

யாழ்ப்பாணம், ஓக. 5
இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதா? அல்லது அரசுடமையாக்குவதாக? என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஒரு முடிவு எடுக்கும் வரை, மீனவர்களின் படகு தொடர்பான வழக்குகளின் விசாரணைகள் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டன.
சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்களின் சான்றுப்பொருள்கள் மற்றும் படகுகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை நீதிமன்றங்களால் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டன.
கடந்த வருடம் 273 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஆனால் அவர்களுடைய 43 படகுகள் தொடர்ந்தும் காங்கேசன்துறை கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தில் கடந்த 7 மாதங்களில் 92 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விடுவிக்கப்பட்டனர். எனினும், இந்த வருடம் கைதான இந்திய மீனவர்களின் 19 படகுகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது வடக்கு கடற்பரப்பில் 62 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (வ-4,107)

# வைத்தியசாலைச் சிற்றூழியரை தாக்கியவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் கடமையின் போது சிற்றூழியர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றில் சரணடைந்த முதன்மைச் சந்தேகநபருக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
கடந்த மாதம் 23ஆம் திகதி இரவு மதுபோதையில் வைத்தியசாலைக்குச் சென்ற ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வர், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த சிற்றூழியர் ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். பின்னர் அவரை இழுத்துச் சென்று தலையைச் சுவருடன் மோதி கொலை செய்ய முயற்சித்திருந்தனர் என்று இளைஞர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.
காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 3 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர். பொலிஸாரால் தேடப்பட்டு வந்த முதன்மைச் சந்தேக நபர் ஒரு வாரத்துக்கு முன்னர் சட்டத்தரணி ஒருவர் மூலம் மன்றில் சரணடைந்தார். இவர்களுக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (வ-4,107)

# சிறுமி மீதான துர்நடத்தைக்கு அனுமதித்த விடுதிக்குச் 'சீல்'

## அதன் ஊழியர் இருவர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, ஓக. 5
சிறுமியை விடுதியில் வைத்துத் துர்நடத்தைக்கு உட்படுத்த அனுமதி வழங்கிய குற்றச்சாட்டில்தங்குமிட விடுதி மறுஅறிவித்தல் வரை சீல் வைத்து மூடப்பட்டது. அதன் ஊழியர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.
வடமராட்சியைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமியை அதே இடத்தைச் சேர்ந்த 23 வய்து இளைஞன் ஒருவர் கூட்டிச் சென்று கிளிநொச்சி- பளையில் உள்ள விடுதி ஒன்றில் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியதாக சிறுமியின் குடும்பத்தினரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பளை பொலிஸார், சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்ததுடன், விடுதி ஊழியர்கள் இருவரைக் கைது செய்து கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். துர்நடத்தை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் இளைஞன் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,ரி3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் மோதியதில் மாணவன் காயம்

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சுக்குச் சொந்தமான பஸ் மோதிப் படுகாய மடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். பஸ் தடுத்து வைக்கப் பட்டதோடு, சாரதி கைதாகி விளக்கமறி யலில் வைக்கப்பட்டார்.

திக்கம் சந்தியில் நேற்றுமுற்பகல் 10 மணியளவில் விபத்து இடம்பெற்றது. சுரேஷ் மதுன் என்ற மாணவனே படுகாயமடைந்தான். சாரதியை 8ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது. பஸ் பருத்தித்துறையில் இருந்து திக்கம் நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்த போதே விபத்து இடம் பெற்றதாகப் பருத்தித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-26)

**பணியாளர் தேவை**

01. கணினி அறிவுள்ளவர்கள்
02. விற்பனைப் பிரதிநிதிகள்
03. பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள்
04. பொதி செய்பவர்கள்

Siva Brothers
No-15, 4th Lane,
Brown Road, Jaffna.
0777722215

**science corner**
(Jaffna Town)
A/L - 2017
Phy - வெப்பியல்
ஆரம்பம் 06/08/2016 சனி 4 pm
ஆசிரியர் திரு.ம.ஸ்பெல்மன் (Bsc PGDE)
A/L - 2018 CHE - பொது இரசாயனம் நடைபெறுகின்றது
A/L - 2018, 2017 PHY, CHE, BIO, MATHS
என்பன சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றது
உரிய காலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்


**SUPER BALL** சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 532
சீட்டிழுப்பு திகதி 2016.08.04
வெற்றி இலக்கங்கள்
14 26 41 55 O
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 44,023,200/=

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1285
சீட்டிழுப்பு திகதி 2016.08.04
வெற்றி இலக்கங்கள்
25 27 55 58 W
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 21,175,320/=

**BEACON**
வெலிங்டன் சந்தி யாழ்ப்பாணம்
தொடர்புக்கு - 077 8652448
பேராதனைப்பல்கலைக்கழகம்
வெளிவாரி B.A Final
மாணவர்களுக்கான கருத்தரங்கு
தொடர்
**வரலாறு**
காலம் - 06.08.2016, 07.08.2016
ஆசிரியர் :
S.S.தாஸ் B.A(Hons)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
GS,சமுர்த்தி
சனி 1.00-5.00
SLTES
ஞாயிறு 9.30-2.00
வட மாகாண சனசமூக ஆய்வு உத்தியோகத்தர்
சனி 1.00-5.00
வட மாகாண ஆசிரியர் தெரிவு
ஞாயிறு 1.00-5.00
கணக்காய்வாளர்
சனி 1.00-5.00
ஞாயிறு 9.00-4.00
D.O.P.M.A EB EXAM
சனி,ஞாயிறு 9.00-12.00
GS,EB EXAM
ஞாயிறு 11.00 மணி
T.P 0766883394
021 2223382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# கண்ணீர் அஞ்சலி



வலி தென்மேற்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளரான **திரு. அ. ஜெபநேசன்** அவர்களின் அன்புத் தந்தை


## அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**ஈ. சரவணபவன்**
**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

# மரண அறிவித்தல்

## அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை (சின்னத்தம்பி)



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிட மாகவும் கொண்ட அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை (சின்னத்தம்பி) 02.08.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் மேரி ஜெனோவாவின் அன்புக் கணவரும் ஜேன் ஜெமினா (லண்டன்), ஜெகரூபன்(டோஹா), ஜெகதீபன் (விரிவுரையாளர்-தொழிநுட்ப கல்லூரி, மன்னார்), ஜெபநேசன் (முன்னாள் தவிசாளர் மானிப்பாய் பிரதேச சபை,அபிவிருத்தி உத்தி யோகத்தர்-நீர் வழங்கல் திணைக்களம்) , காலஞ்சென்ற ஜெகஜீவன், ஜெனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற அன்சலம், லூட்ஸ்மேரி (கனடா), ஞானரத்தினம் (ஜேர்மன்), காலஞ்சென்ற சூசைநாதன், ஞானப் பிரகாசம் ஆகியோரின் சகோதரரும் மனோகரன், ரேணுகா, நிவித்திகா ஆகியோரின் மாமனாரும் கதிரவன், எழில், விஸ்னு, ஜீவன், ஹரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மானிப்பாய் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் பெரியவிளான் புனித யுவாணியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பெரியவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 3496085, 077 3400950**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. வதிவிட இணைப்பாளர் பதவிக்கு உனா மக்கோலி

கொழும்பு, ஓக. 5
இலங்கைக்கான ஐ.நாவின் புதிய வதிவிட இணைப்பாளராகவும், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்துக்கான வதிவிடப் பிரதிநிதியாகவும் உனா மக்கோலி நியமிக்கப்பட்டார்.
அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்றுச் சந்தித்து தமது நியமன ஆவணங்களைச் சமர்ப்பித்தார்.
இலங்கையில் செயற்படும் ஐ.நாவின் 21 வதிவிட மற்றும் வதிவிடமற்ற முகவர் அமைப்புகளுக்கு, இவர் தலைமை தாங்குவார். ஐ.நா. பொதுச் செயலரின் இலங்கைக்கான பிரதிநிதியாகவும் செயற்படுவார். இவர் யுனிசெவ்வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நான்கு ஆண்டுகள் பணியாற்றியிருந்தார்.
பனாமா, டோகா, சூடான், கென்யா, அங்கோலா, ஆகிய நாடுகளின் ஐ.நா. அமைப்புகளில் இவர் பணியாற்றியுள்ளார். (ந-5)

# சுற்றாடல் விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 5
அமெரிக்கத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.
இல.23, அத்தியடியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கண்காட்சி நடைபெறவுள்ளது. கண்காட்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விடயங்களும், சூழலுக்கு ஏதுவான உணவுப் பொருள்களும், பனை உற்பத்திப் பொருள்களும் மற்றும் வேறு பல விடயங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
கண்காட்சியில் அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-ரி)


## தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம்
வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

தலைமை :- திரு.ச.சிவானந்தராசா
காலம் :- 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30
இடம் :- தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபம் துர்க்காதேவி தேவஸ்தானம் அருகில்.
பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 15.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
லயன் சி.ஹரிகரன்,
செயலாளர்.
(கு/3502) (11.18)

## பணியாளர் தேவை
கிளிநொச்சி, கரடிப்போக்குச்சந்தியில் அமைந்துள்ள சிவகுரு ஹாட்வெயார் நிறுவனத்துக்குக் கீழ்க் குறிப்பிடப்படும் பணிகளுக்கு ஆண் பணியாளர்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.
குறிப்பு: உணவு, தங்குமிடவசதி என்பன இலவசமாக வழங்கப்படும்.
1. கணக்காளர் (கணினியறிவு போதியளவு அனுபவம்)
(சம்பளம் -25,000/= அடிப்படை)
2. காசாளர் (அனுபவமுள்ளவர்)
(சம்பளம் 25,000/= அடிப்படை)
3. மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்
(சம்பளம் 25,000/=. அடிப்படை ஊக்குவிப்பும் உண்டு)
4. சிமெந்து வெளிக்கள உத்தியோகத்தர்.
(சம்பளம் 25,000/=, ஊக்குவிப்பும் உண்டு)
5. கட்டடப் பொருள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்.
(சம்பளம் 25,000/=)
6. மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்.
(சம்பளம் 20,000/=, ஊக்குவிப்பும் உண்டு)
7. எழுதுநர் (கணினியில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது)
(சம்பளம் 20,000/=)
8. சாரதிகள் (10சில்லு பாரஊர்தி செலுத்துவதில் அனுபவமுள்ளவர்கள்)
(சம்பளம் 50,000/= வழங்கப்படும்)
077 320 7739
சிவகுரு ஹாட்வெயார்
A9 -வீதி, கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி.

## ஊழியர்கள் தேவை
பலசரக்கு மொத்தவிற்பனை நிலையத்துக்கு ஊழியர்கள் தேவை.
1. கணக்காளர்
2. சிட்டை எழுதுநர்
3. சிற்றூழியர்.
தொடர்பு:
ஜமுனா ஸ்ரோர்ஸ்
39, பிரதானவீதி, நெல்லியடி.
077 742 2604

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.00 / 1.00 / 7.00
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
ICE AGE 3D மஜெஸ்டிக் பிளாட்டினம் 4.00 p.m



சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk


# முல்லை. மது வரித் திணைக்களத்தால் ஆறு மாத காலத்தில் 231 வழக்குகள்

கிளிநொச்சி, ஓக. 5
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மதுவரித் திணைக்களத்தால் ஆறுமாத காலத்துக்குள் 231 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் ஜூன் வரைக்குமான காலப் பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்றங்களில் 231 வழக்குகளும், 226 வழக்குகளின் தண்டப்பணமாக 14 லட்சத்து 16 ஆயிரத்து 600 ரூபா அறவிடப்பட்டது என்று மதுவரித் திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.
கசிப்பு உற்பத்தி நிலையங்களில் கைது செய்யப்பட்ட 3 பேரும், கசிப்பை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 53 பேரும், கோடாவை வைத்திருந்த ஒருவரும், கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்ற குற்றச் சாட்டில் 5 பேரும், அனுமதிப்பத்திரம் இன்றி கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 91 பேரும், அளவுக்கு மீறிய கள் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 35 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்ற குற்றச்சாட்டில் 41 பேருமாக மொத்தமாக 231 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்று புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-ரி)


## வாடகைக்கு
கொக்குவில் மருத்துவபீட சுற்றாடலில் மாடிவீட்டின் மேற் பகுதி வாடகைக்குக் கொடுக்கப்படும். இரண்டு அறைகள் விறாந்தை (HALL) மருத்துவபீட மாணவர்கள் அல்லது சிறிய குடும்பத்தினர்களுக்கு ஏற்றது.
077 296 4899

## கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்தியில் இருந்து கொட்டடிப் பாதையில் அகலம் 11½ நீளம் 70அடி கீழ்தளம், மேற்தளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
071 560 4213

## பெயர்மாற்றம்
கைதடி கிழக்கு,கைதடியைச் சேர்ந்த இராச்சியம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து இராணி எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
இராணி

## வீடு வாடகைக்குண்டு
சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் 5 அறைகளுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
077 518 5460, 077 373 6630
shivakums@live.no


## விவாதப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 5
விழுமியங்களின் விவாதப் போட்டியின் இறுதிச் சுற்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு பிறவுண் வீதியில் அமைந்துள்ள சுகதாமம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.
வளர்க்கப்பட வேண்டியது சுதந்திரமா? சகிப்புத் தன்மையா? என்ற தலைப்பில் இந்த விவாதப் போட்டி நடைபெறவுள்ளது. (ந-ரி)

## ஆடிப்பூரப் பூசை

யாழ்ப்பாணம், ஓக. 5
நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆடிப்பூரப் பூசை நடைபெறவுள்ளது.
காலை 7 மணிக்கு விசேட அபிசேக ஆராதனையும், மு.ப. 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெற்று அம்பாள் வெளிவீதியுலா வருவார். (ந-ரி, 160)


## அறிவித்தல்



ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் வசிப்பவராகிய Mr.Arullanantham Saji Sangar (showroom Sales Executive) (NIC 881152487v) என்பவர் 30.06.2016 முதல் Futureworld Lanka Pvt.Ltd இன் யாழ்ப்பாணக் கிளையிலிருந்து விலகியதால், 30.06.2016 இற்குப் பின்னர் Futureworld Lanka Pvt.Ltd இன் பெயரில் மேற்குறிப்பிட்ட நபருடன் எவ்வித கொடுக்கல்வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பு ஏற்கமாட்டாது. என்பதனை அறியத்தருகின்றோம்.
Futureworld Lanka Pvt.Ltd
70,72, Stanly Road,Jaffna.
Tel: 021 2219655

## யாழ்ப்பாண மாநகரசபை
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2016

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 05.08.2016 - 10.08.2016 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 01.30ம்ணிவரை விநியோகிக்கப்படும். 10.08.2016 புதன்கிழமை பிற்பகல் 2 மணிவரை படிவங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.
மேலதிக விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை, நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.
பொ.வாகீசன்,
ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
04.08.2016

## பணிநிலை வெற்றிடம்
இல.203, கண்டிவீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்துக்கு (NAHRO ) பின்வரும் பணிநிலைக்கான உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.
சிறந்த ஆரோக்கியமும், மனிதநேயத்துடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்கள் யாவும் ஒரு பக்கத்தில் சுயமாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| இல | பணிநிலை | வயதெல்லை | கல்வித்தகைமை | தொழிற்தகைமை | தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | திட்ட இணைப்பாளர் | 30 - 60 | பட்டதாரி | முன் அனுபவம் | 01 |
| 02 | வெளிக்கள உத்தியோகத்தர் | 25 - 30 | க.பொ.த. சா/தரத்துடன் க.பொ.த. உ/தரத்தில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது. | 02 |
| 03 | செயற்திட்டங்களுக்கான இணைப்பாளர்கள் | 30 - 40 | பட்டதாரி அல்லது க.பொ.த.சா/தரத்துடன் க.பொ.த. உ/தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். | முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது. | 02 |

விண்ணப்பங்கள் யாவும் இல. 203, கண்டிவீதி, கிளிநொச்சி என்னும் தபால் முகவரிக்கோ அல்லது nahrongo@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ 2016.08.15 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
கௌரவ செயலாளர், NAHRO இல.203 கண்டிவீதி, கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்சன் பெய்ம் பணியாளர் கொலைக்கு காரணமானோரை தண்டிக்க வேண்டும்

## 10 ஆண்டு நினைவு கூரலில் உறவினர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 5

அக்சன் பெய்ம் நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேரின் படுகொலையின் சூத்திரதாரிகள் 10 வருடங்களாகியும் கண்டு பிடிக்கப்பட்டு சட்டத்தின் முன்னர் நிறுத்தப்படவில்லை. அதற்குக் காரணமானவர்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று உறவினர்களால் நினைவுகூரப்பட்டது. அதிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மூதூரில், இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் நடைபெற்ற காலத்தில் இந்தப் படுகொலைச் சம் பவம் நடைபெற்றது. விடுதலைப் புலிகள், இராணுவக் கட்டுப் பாட்டு பகுதிக்குள் பிரவேசித்து விட்ட நிலையில், இரு தரப்புக் குமிடையே மோதல் தீவிரமடைந்திருந்தது.

மூதூர் நகரில், இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் அமைந்திருந்த அலுவலகத்திற்குள் வைத்து பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் திகதி வழக்கம் போல் அலுவலகத்துக்குச் சென்றிருந்த பணியாளர்கள், மோதல் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில்அங்கு தங்கியிருந்தனர் என்று கூறப்படுகின்றது.தொலைபேசி ஊடாகத் தொடர்பில் இருந்த அவர்களின் தொடர்புகள் ஓகஸ்ட் 3 ஆம் திகதியுடன் துண்டிக்கப்பட்டு விட்டது என்று உறவினர்கள் கூறுகின்றார்கள்.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்றது என்று கருதப்படும் இந்தச் சம்பவத்தில் அங்கு 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் என அங்கு தங்கியிருந்த அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் தகப்பன், மகள் உள்பட 16 பேர் தமிழர்கள். ஒருவர் இஸ்லாமியர்.

இந்தப் படுகொலை உட்பட உள்நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, விசாரணை செய்ய மகிந்த ராஜபக்ச, ஓய்வு பெற்ற நீதியரசர் நிஸங்க உடலகம தலைமையில் ஆணைக் குழுவொன்றை நியமித்தார். படுகொலைச் சம்பவத்தில் இலங்கை படையினருக்கு தொடர்புகள் கிடையாது. இருப்பினும் முஸ்லிம் ஊர்காவல் படைக்குத் தொடர்புகள் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அக்சன் பெய்ம் நிறுவனம், உயிரிழப்புச் செலவுடன் இழப்பீட்டுத் தொகையாக ஐந்து லட்சம் ரூபாய் மட்டுமே தங்களுக்கு வழங்கியது என்று சம்பவத்தில் தனது மகளை இழந்த பிலோமினா சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் நேரிலும், தொலைபேசியிலும் தொடர்புகளை பேணி வந்த நிறுவனம், கடந்த 7 வருடங்களாக தொடர்புகளைத் துண்டித்துள்ள நிலையில் நிறுவனம் கூட தங்களை கைவிட்டு விட்டதாகவே உணர்கின்றோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் பதவிக்கு வந்த புதிய அரசும் இது பற்றிப் பேசுவதில்லை என்றும் பிலோமினா சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

சம்பவத்தில் கணவனையும் மகளையும் இழந்த சிவனேஸ்வரி கணேசன், செய்தவர்கள் யார் என்று தெரியாது? மனித நேய பணியில் ஈடுபட்டவர்களுக்கு நேர்ந்த இந்தக் கொடூரத்திற்குப் பொறுப்பானவர்கள் யார்? என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

(ற-5)

## புலமைப் பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 5

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் நடத் தப்படும் இலவச புலமைப் பரிசில் வழிகாட்டல் கருத் தரங்கு நாளை காலை 8 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் வலிகாமப் பிரதேச புலமைப் பரிசில் ஆசிரியர் க. கலாமோகனால் பரீட்சை எதிர் பார்க்கை அடிப்படையில் மாதிரி வினாத்தாள் ஊடாக கற்பிக்கப் படும்.

ஆரம்ப நிகழ்வில் தலைமை அதிதியாக யாழ். – கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினரும்சம்மேளன ஆலோசகருமான ஈ.சரவணபவன் கலந்து கொள்வார். (ற-5)

## பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பில் அல்வாயில் சிக்கியது 4 கிலோ கஞ்சா

வடமராட்சி அல்வாயில் நேற்று முன்தினம் இரவு போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவு நடத்திய அதிரடி சுற்றிவளைப்பில் 4 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை 7 நாள்களுக்கு பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க பருத்தித்துறை நீதிவான் நேற்று பொலி ஸாருக்கு அனுமதி வழங்கினார்.

யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்னவின் கட்டுப்பாட்டில் இயங்கும் பொலிஸ் பிரிவே சுற்றி வளைப்பை நடத்தியது. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணையின் பொருட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டனர்.- என்று வடமராட்சிக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம் ஜவ்பர் தெரிவித்தார்.

வீடொன்றில் கஞ்சாப் போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்று சுற்றிவளைக்கப்பட்டது. கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன.

அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த எம் கௌசிகன் (வயது- 26), எம் கபில்ராஜ் (வயது - 29), ராசலிங்கம் விக்னேஸ்வரன் (வயது - 23) ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,109)

## ஆன்மிக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நால்வர் காட்டிய நன்னெறி என்னும் தலைப்பில் பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வு பெற்ற அதிபரும் கவிஞருமான சோ. பத்மநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(ற-35)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



(இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும்,
யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான (காணி)
திரு.சுப்பிரமணியம் முரளிதரன்
(BSc,MA (Population Development Studies), LLB)
அவர்கள் 03.08.2016 புதன்கிழமை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் மேற்கொண்டமையிட்டு அவர் சேவையில் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புட னும் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: கிராம அபிவிருத்திச் சங்கம்,
எழுதுமட்டுவாழ் தெற்கு.
(6.104)
(19.16)

உளமார வாழ்த்துகின்றோம்



திரு. சுப்பிரமணியம்
முரளிதரன்
(SLAS, Bsc (HONS); M.A
LLB, ATTORNEY-AT.LAW)
Best Wishes
யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராக (காணி) கடமையாற்றிவரும் திரு.சு.முரளிதரன் அவர்கள் 03.08.2016 அன்று உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்ததையிட்டு உளமார வாழ்த்துகின்றோம்.
பொ.இராசேந்திரம் குடும்பம்.
கிராம உத்தியோகத்தர்-ஓய்வுநிலை
இளவாலை வடக்கு, இளவாலை.

மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் மாவட்ட மேலதிக
அரசாங்க அதிபர் (காணி)
திரு. சுப்பிரமணியம்
முரளிதரன்
( Bsc (Hons), M.A (Population
Development Studies)
LLB, Attorney-at.Law)
Best Wishes
அவர்கள் 03.08.2016 புதன்கிழமை அன்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாகப் பதவிப்பிரமாணம் மேற்கொண்டதையிட்டு அவர் தம் சேவையில் மேலும் பட்டங்கள், பதவி உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சையை மேற்பார்வை செய்தவர் சாவு

கொழும்பு, ஓக. 5
பண்டாரவளை புனித ஜோசப் வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் உதவி மேற்பார்வையாளராக பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவர் நேற்றுக் காலை திடீரென உயிரிழந்தார். 52 வயதான உதவி மேற்பார்வையாளரே மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிய வருகின்றது.
சடலம் பண்டாரவளை வைத்தியசாலையில் பிண அறையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அதனால் பரீட்சைக்குத் தடங்கல் ஏற்படவில்லை. (ற-5)

## இறுதி நேரத்தில் பரீட்சைக்கு அனுமதி விசாரணைகள் நடத்துமாறு பணிப்பு

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 5
வெளிமாவட்ட மாணவர்களுக்கு இறுதி நேரங்களில் பாடசாலைகளில் உயர்தரத்தில் அனுமதி வழங்கப்பட்டு பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் மத்திய மாகாண கல்விப்பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்தார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் தெரிவித்துள்ளதாவது:
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாடு முழுவதிலும் நடைபெற்று வருகின்றது. இந்தப் பரீட்சையில் வெளிமாவட்டங்களில் இருந்து நுவரெலியா மாவட்டத்துக்கு வந்து இதுவரை காலமும் பாடசாலைகளில் காணாத புது முக மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருப்பது தொடர்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இது தொடர்பாக நான் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன்.

> இந்தப் பரீட்சையில் வெளிமாவட்டங்களில் இருந்து நுவரெலியா மாவட்டத்துக்கு வந்து இதுவரை காலமும் பாடசாலைகளில் காணாத புது முக மாணவர்கள் பரீட் சைக்கு தோற்றியிருப்பது தொடர்பாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த செயற்பாடானது எமது மலையக மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். உயர்தரத்தில் வெட்டுப் புள்ளிகள் ஓரளவு குறைவாக இருக்கின்ற ஒரு மாவட்டமாக நுவரெலியா மாவட்டம் இருக்கின் றது. இந்த சந்தர்ப்பம் முழுமையாக எமது மலையக மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் அக்கறையாக இருக்கின்றேன்.
சில பாடசாலைகளின் அதிபர்கள் பணம் பெற்றுக் கொண்டு இறுதி நேரத்தில் பாடசாலை களுக்கு மாணவரை உள்வாங்கியுள்ளனர் என்று தகவல்கள்கிடைத்துள்ளன. நுவரெலியா, ஹட்டன் பகுதிகளில் உள்ள 12 பாடசாலைகளில் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொண்டபின்பு அவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களின் தகுதி, தராதரம், அரசியல் எந்தவேளையிலும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது - என்றார். (ற-5)

## மகிந்த ஆட்சியில் ஒட்டுக் கேட்க 150 ஆயிரம் டொலரில் உபகரணம்

### அமைச்சர் ஹரின் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 5
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்பதற்காக 150 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான உயர் தொழிநுட்பம் வாய்ந்த உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவென்று டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.
ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயேஅமைச்சர் இந்தத்தகவலை வெளியிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
இவ்வாறான உபகரணங்கள் நாட்டுக்கு தேவையில்லை. குறித்த உபரணங்களை மீண்டும் விநியோகஸ்தர்களுக்குத்திருப்பிஅனுப்ப தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
ராஜபக்சாக்கள் அதிகாரத்தில் இருக்கும் போது மக்கள் மற்றும் எதிர்தரப்பினரை உளவு பார்க்கும் செயற்பாடுகளிலேயே அதிகநேரம்செலவு செய்தனர்.- என்றார். (ற-5)


## மரண அறிவித்தல்

**திருமதி சிவபாக்கியம்(சிவா) திருநாவுக்கரசு**



தோற்றம் 24.05.1928
மறைவு: 02.08.2016

தெல்லிப்பழை. வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி. உரும்பிராய் ஒஸ்காலேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் (சிவா) திருநாவுக்கரசு 02.08. 2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் கலா. பவானி. உதயன். ராஜன். காலஞ்சென்ற ரவி ஆகியோாரின் அன்புத் தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08 . 2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் அப்போஸ்தர் சபை மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒஸ்கா லேன்,பலாலி வீதி,
உரும்பிராய்.

தகவல்:
பிள்ளைகள்.

077 193 6027

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



17.08.2015 அன்று
சிவபதப்பேறடைந்த எமது
குடும்பத் தலைவி

**இரத்தினம் பூங்காவனம்**

தோற்றம் 12 . 09 . 1927
மறைவு 17 . 08 . 2015

அன்னாரின் ஆண்டுத்திவசம் இன்று(05.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.29, அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 06 . 1944
மறைவு 21 . 07 . 2012

**அமரர் நாகலிங்கம் தியாகராசா**

திதி: திருதியை (05.08.2016) ஆடி -21

சைவப் பாடசாலை லேன்,
கோண்டாவில் மேற்கு.

குடும்பத்தினர்.
தி. வைகுந்தவாசன்

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 24 . 08 . 1944
மறைவு 06 . 07 . 2016

**அமரர் சின்னத்துரை தியாகராசா**

கடந்த 06.07.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கட்டுவன் மேற்கு,
கட்டுவன், தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி பல நிதிகள் மூலம் முன்னெடுப்பு

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக 5
கைவிடப்பட்டிருந்த வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்கள் வட மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடைப் பணம் உட்பட பல நிதிகள் மூலமாக பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் மத்திய அரசும், வட மாகாண சபையும் இணைந்து மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவை நடத்தின. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசம் பல ஆண்டுகளாக கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. தற்போது இந்தப் பிரதேசத்தில் பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுக்காக சுமார் 67 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மணல்காடு கடற்கரையில் சுற்றுலா அபிவிருத்திக்காக பல நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிகைகளை எடுத்து வருகின்றோம்.

பாடசாலைகள், மீனவர் வாழ்வாதாரம், போக்குவரத்து எனப் பல அபிவிருத்தித் திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்படுகின்றன. உலக வங்கி சுமார் 38 கிலோ மீற்றர் தெருக்களைச் சீரமைக்க முன்வந்துள்ளது. இவற்றை விட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை 127.5 மில்லியன் பணத்தை உங்கள் அபிவிருத்திக்காகத் தந்துதவ முன்வந்துள்ளது. இந்தக் குடிதண்ணீர் பிரச்சினைகள், சுகாதாரப் பிரச்சினைகள், கிராமக் கட்டமைப்பு, விவசாயம், மீன்பிடித் தொழில் போன்ற பல பிரச்சினைகளை குறித்த நிதியம் தீர்க்க இருக்கின்றது.

மருதங்கேணி பிரதேசம் எமது கவனிப்புக்கும், கூர்நோக்குக்கும் உள்ளாகியுள்ளது என்றால் அது மிகையாகாது. இன்று இந்த குறைநிவர்த்தி நடமாடும் சேவையை இங்கு நடத்துவதால் எம்மைத் தேடி நீங்கள் வராது உங்களைத் தேடி எங்களை வரவழைத்துள்ளீர்கள். உங்கள் பல காலக் குறைபாடுகள் இன்றுடன் தீரும் என்பது எமது எதிர்பார்ப்பு. பல திணைக்களங்கள், அமைச்சுக்கள் தமது அமைச்சர்கள், அலுவலர்களுடன் இங்கு முகாமிட்டுள்ளனர். உடனேயே முடிவுக்குக் கொண்டுவர முடியாத விடயங்களைக் கருத்துக்கு எடுத்து மிக விரைவில் அவற்றுக்கான தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று எம்மால் கூற முடியும். மத்திய அரசுடன் பேச வேண்டிய விடயங்களையும் நாம் உரியவாறு நடவடிக்கை எடுத்து ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முழுமையுடன் முயற்சிப்போம்.

உங்கள் அனைவரதும் பல காலக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கே இந்தக் குறை நிவர்த்தி நடமாடும் சேவை பல லட்சம் ரூபா செலவில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது - என்றார்.

நிகழ்வில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான புத்தகப் பைகள், கல்வி உபகரணங்கள், குடத்தனை வலிக்கண்டிப் பகுதியிலும் மணல்காடு கிராம சேவகர் பிரிவிலும் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கான காணி உறுதிப் பத்திரங்களையும் வட மாகாண முதலமைச்சர் வழங்கினார்.

நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-109)

# உழவு இயந்திரம் மோதி இரு சிறுவர்கள் காயம்

சாவகச்சேரி, ஓக. 5
பனைமரங்கள் ஏற்றிவந்த உழவு இயந்திரம் வீதி வளைவில் திரும்பிய போது சைக்கிளை மோதியது. தந்தையுடன் பயணித்த 6 வயது சிறுவனுக்கு கால் முறிந்தது. ஒரு வயதுச் சிறுவனுக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த ஜெயரூபன் சாருஜன் (வயது-6), ஜெயரூபன் அஸ்வின் (வயது-1) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சாவகச்சேரி பொலிஸார் உழவு இயந்திரச் சாரதியை கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். சாரதியை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுக் காலை கைதடிச் சந்தியில் உள்ள கடைக்கு பொருள்கள் கொண்டு வந்த முதியவரை அவ்வழியே வந்த பவுசர் மோதிக் காயப்படுத்தியது. காயமடைந்தவர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வாகனச் சாரதியைக் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-5-9)



யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரிக்கு சேவையாற்றியமைக்காக முன்னாள் அதிபர்கள் வணபிதா சி.ஏ.சிமித், ஏ.ஈ.தம்பர் ஆகியோரது உருவச் சிலைகள் கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டன. கல்லூரி முதல்வர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த பழைய மாணவன் ஆர்.சாந்தகுணநாதன் உருவச் சிலையை திரைநீக்கம் செய்தார். சிலை அமைப்பதற்குரிய நிதியுதவியை அவரே வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)



கொமர்சல் வங்கி மானிப்பாய் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா நேற்று வங்கிக்கிளையில் முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் சிவனந்தராஜா கலந்துகொண்டார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அருணலு சிறுவர் சேமிப்புக்கண்க்கு வைத்திருக்கும் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் முறையே தலா 10,000/-, 7,500/- மற்றும் 5,000/- பணம் அவர்களது அருணலு சேமிப்புக்கணக்கிற்கு வைப்பிலிடப்பட்டதோடு, பாடசாலை உபகரணங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (வ)

# பஸ்டா குளுபோசினேட் களைநாசினிக்கு தடை

யாழ்ப்பாணம், ஓக. 5
இலங்கையில் தடைசெய்யப்பட்ட களை நாசனிகளுக்கு மேலதிகமாக பஸ்டா குளு போசினேட் என்ற களைநாசினி தற்போது தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ச.கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பீடைக்கொல்லிகள் பதிவாளரின் கடிதத்தின் பிரகாரம் இது தடை செய்யப்பட்டுள்ளது. கிளைபொசேற், காபோபியூரான், காபரில் மற்றும் குளோர்பைறிபொஸ் என்பவற்றை செயற்படுபொருளாகக் கொண்ட கிருமி நாசினிகளை விற்பனைக்காக வைத்திருத்தல் மற்றும் உபயோகித்தல், விற்பனை செய்தல், நாட்டுக்கு இறக்குமதி செய்தல் என்பன ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளன.

தற்போது குளுபோசினேட் அமோனியத்தை செயற்படு பொருளாகக் கொண்ட குளுபோசினேட் மற்றும் பைப்லைன் குளுபோசினேட் அமோனியம் எனும் வர்த்தகப் பெயர் கொண்ட சர்வ களை நாசினிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

புறோபனைலை செயற்படு பொருளாக் கொண்ட கொம்புறோ 60 இ.சி, போர்டி 500 இ.சி, பவரின் என்பன வரையறுக்கப்பட்ட அளவில் பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (ற-ரி)

# கச்சதீவு ஆலய நிர்மாணப் பணியைப் பார்க்க வருகிறது அமைச்சர் குழு

யாழ்ப்பாணம், ஓக. 5
கச்சதீவில் புதிதாக நிர்மாணிக்கப்படும் அந்தோனியார் ஆலயத்தை கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலர் எதிர்வரும் 11 ஆம் திகதி பார்வையிடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கச்சதீவில் கடற்படையால் புதிய அந்தோனியார் ஆலயம் நிர்மாணிக்கப்படுகின்றது. இந்த ஆலயம் அமைக்கப்படுவதை தமிழக அரசு எதிர்த்து வருகின்றது. ஆலயம் நிர்மாணிக்கப்படுவது தொடர்பில் தம்முடனும் கலந்துரையாடவேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியிருந்தது.

ஆலயம் அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதைப் பார்வையிடுவதற்கு கிறிஸ்வ விவகார அமைச்சின் செயலர் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் குழுவினர் கச்சதீவுக்குச் சென்று புதிய ஆலய நிர்மாணப் பணிகளை பார்வையிடவுள்ளனர். (ற-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய அம்பாள் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. சித்தரத் தேரில் வாலாம்பிகாதேவி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். (ற-ரி)

# தரவுகள் சரியாக இல்லாது இருப்பதற்கு அலுவலர்களின் செயற்பாடே காரணம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

தரவுகள் நம்பகத்தன்மை இல்லாமல் இருப்பதற்கு அலுவலர்கள் களப் பயணம் செய்யாமல் அலுவலகத்தில் இருந்தபடி தரவுகளைத் தருவதே காரணம்.

எமது அலுவலர்களிடம் காணப்படும் மிகப்பெரிய பிழை இதுவாகும். இந்தத் தவறுகள் திருத்தப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

மத்திய அரசும், வடமாகாண சபையும் இணைந்து முன்னெடுத்த மக்கள் குறை நிவர்த்தி சேவை மருதங்கேணி பிரதேச செயலகத்தில் மருதங்கேணி பிரதேச செயலர் கனகேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே யாழ். மாவட்டச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்றைய சூழலில் தரமான சிறந்த சேவை மக்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது. எமது மக்களுக்குத் தேவைகள் நிறைய இருக்கின்றன. மக்களை நாடிச் சென்று தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பு அலுவலர்களுக்கு உள்ளது. இன்று தரவுகள் நம்பகத் தன்மை இல்லாமல் இருப்பதற்கு அலுவலர்கள் களப் பயணம் செய்வதில்லை என்பதுதான் காரணமாக அமைகின்றது. அவர்களிடம் தரவுகளைக் கேட்டால் அலுவலகத்தில் இருந்தே தரவுகளைத் தருகிறார்கள். வெள்ளம் வரும்போது பலர் எம்மிடம் முறையிடுவார்கள். நாங்கள் குறித்த அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டால் அவர்கள் வந்து பதியவில்லை என்பார்கள். எவருக்குத் தேவை இருக்கின்றதோ அவர்களுக்கு அது கிடைக்காமல் போகின்றது. இது அலுவலர்கள் செய்யும் பிழையாக அமைகின்றது. அவர்களைத் திருத்த வேண்டிய அவசியமும் இருக்கின்றது.

> எல்லோரும் நேர்த்தியான அர்ப்பணிப்பான சேவையைச் செய்கின்றபோதுதான் மக்களின் தேவைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எல்லோரும் நேர்த்தியான அர்ப்பணிப்பான சேவையைச் செய்கின்றபோதுதான் மக்களின் தேவைகளுக்குத் தீர்வு காணமுடியும். வடமராட்சி கிழக்கு பிரதேசம் யாழ்ப்பாணத்தில் இருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் போக்குவரத்துவசதிகுறைந்த இடமாகஉள்ளது. இங்குள்ள மக்களுக்கு நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன.

இந்தப் பிரதேசம் நடமாடும் சேவைக்காக முதலமைச்சரால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன் நாமும் மாகாண சபையும் சேர்ந்து வேலை செய்வதில் நிறையப் பிரச்சினைகள் இருந்தன. இன்று சேர்ந்து செய்ய முடிகின்றது. இப்படிச் சேர்ந்து செய்வதன் ஊடாகவே சிறப்பான சேவையை வழங்கக் கூடியதாக உள்ளது.-என்றார். (ற-109)

# விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் 21 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்

தென்மராட்சி, ஓக.5

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகத்தால் கடந்த மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை, சாவகச் சேரி வடக்கு ஆகிய பிரிவு களில் நடத்தப்பட்ட விசேட டெங்குச் சோதனையில் 21 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பொலிஸ், சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றின் பங்களிப்புடன் டெங்கு சோதனை நடத்தப்பட்டது. 712 குடியிருப்புகள் தரிசிக்கப்பட்டன. டெங்கு உற்பத்தியாகக்கூடிய 135 இடங்கள் இனங் காணப்பட்டன. டெங்கு அபாயம் காணப்படுவதாக கருதப்படும் 21 பேருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. 15 தினங்களுக்குள் இனங்காணப்பட்ட பகுதிகளைத் துப்புரவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குத் தொற்று ஓரளவு குறைந்துள்ள போதும் திருப்தியளிக்கும் விதத்தில் இல்லை. புலம் பெயர் நாடுகளிலிருந்து வருவோரை அழைத்து வரத் தென்பகுதி செல்வோரும், தென் பகுதிக்கு சுற்றுலா செல்வோருமே டெங்குத் தொற்றுக்குள்ளாகின்றனர். தென் பகுதிக்குச் செல்வோர் டெங்கு நுளம்பு தொடர்பான பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளவேண்டும் - என்றார். (ற-9)

# சிறந்த பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.5

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் மாவட்ட ரீதியாக சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று மாகாணப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

வடக்கு மகாணத்தில் பசு, ஆடு, கோழி ஆகிய கால்நடைகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கடந்த மூன்று வருடங்களாக இந்தப் போட்டியில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த வருடப் போட்டியில் பங்குபற்ற இயலாது.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவிரும்பும் பண்ணையாளர்க்ள் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்படிவத்தை அருகில் உள்ள கால்நடை வைத்திய அலுவலகங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ற-ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம் சார்ந்த இடங்களை பாதுகாக்கும் தேவை எழுந்துள்ளது

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.5

போர் முடிந்த பின்னரும் சைவ சமயத்துக்கு இடையூறுகள் வந்தவாறு உள்ளன. எமது மதம் சார்ந்த இடங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பிறமதங்களின் ஆக்கிரமிப்பு எமது மதத்தைச் சீரழிக் கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையில் கீரிமலை சிவபூமி மடத்தில் ஆடி அமாவாசை புண்ணிய நாளில் நீத்தார் நினைவு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் இங்கு இருந்த 11 மடங்கள் அழிக்கப்பட்டன. கடந்த காலங்களில் இறந்தவர்களுக்கு செய்யும் இந்தப் பிதிர்க் கடன்களையே மிகவும் சிரமமான சூழ்நிலையில் செய்ய வேண்டி இருந்தது.

தளராத பக்தி நிறைந்த ஒரு சிலரால் பிதிர்க்கடன்களை செய்வதற்கான மண்டபம் அமைக்கப்பட்டது. இன்று அகில இலங்கை இந்து மாமன்றத்தால் இந்த மண்டபத்தில் நீத்தார் நயப்புரை நிகழ்த்தப்படுகின்றது.

இந்து மாமன்றத்தில் உள்ள இறந்தவர்களை மட்டுமன்றி இந்தத் தினத்தில் பறிகொடுத்த மக்கள்அனைவரையும்நினைந்து வழிபாடு செய்வது மிகவும் பொருத்தமானது.

தற்போதைய காலம் சைவ மக்களுக்கு மிகவும் இக்கட்டான காலமாக உள்ளது. கீரிமலையில் சித்தர்களின் சமாதிகளுக்கு பக்கத்திலே மீன்பிடி இறங்குதுறை கட்டப்படுவது மிகவும் கவலைக்குரியதான விடயம். எங்களது சமயம் சார்ந்த இடங்களை பாதுகாக்கவேண்டிய தேவையும் எழுந்துள்ளது. திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ள காணி எமது முன்னோர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த காணியாகும். அந்தக் காணிக்குள் பிற சமயத்தவர்கள் தங்களுடைய தெய்வங்களை வைத்து வணங்குவது மிகவும் மனவருத்தத்துக் குரியது.

நயினாதீவு பிரதேசம் ஒரு புனித பூமியாகத் திகழ்கின்றது. நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் மிகவும் பிரசித்தமான கோயில். இந்தச் சூழலில் பௌத்த மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதக்கோயில்கள் என்பவையும் உள்ளன. இலங்கையின் சரித்திரத்தின் படி 63 சக்தி பீடங்களில் ஒன்றான நயினாதீவின் பாரம்பரியத்தைக் காப்பாற்றவேண்டியது எமது கடமையாகும். இந்து மதங்களுக்கு எதிராகக் காணப்படும் பிரச்சினைகளை விரைவில் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ற–ரி)

# கொத்தணி அடிப்படையில் வீட்டுத் தேவை மதிப்பீடு

## வலி. மேற்கில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.5

வலி.மேற்கில் கொத்தணி அடிப்படையில் மக்களின் வீட்டுத் தேவை மதிப்பீட்டை வலி.மேற்கு பிரதேச சபை மேற்கொண்டு அதன் முழுமையான விவரங்களை அறிக்கையிட வேண்டும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சித் வசந்த ஹகவால கேட்டுள்ளார்.

முதற்கட்டமாக வலி.மேற்கு பிரதேச சபையால் அராலி உப அலுவலகத்துக்கு உட்பட்ட அராலி மத்தி, ஊரத்தி கிராமத்தில்வாழும்குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணி உறுதிப் பத்திரத்தில் எத்தனை குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் தேவை என்ற ஆய்வு விவரம், சங்கானை மத்தி கிராமத்தில் வலி. மேற்கு பிரதேச சபையால் வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரங்களில் எத்தனை குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் தேவை என்ற ஆய்வு விவரம் என்பன பெறப்படவுள்ளன.

அராலி மத்தி மற்றும் சங்கானை மத்தி ஆகிய குடியேற்ற கிராமங்களில் வாழும் மக்களுக்கு விண்ணப்பப்படிவங்களைவழங்கி அதன் அடிப்படையில் வீடுகள் முழுமையாக தேவை யானவர்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன. அதற்கென ஆய்வு படிவம் தயாரிக்கப்பட்டுள் ளது. படிவத்தின் ஊடாக பெறப்படும் விவரங்களின் அடிப்படையில் காணியில் குடி இருக்கும் மக்களின் வீட்டுத் தேவை குறித்த சம்மதம், அதற்காக மக்கள் படிவத்துடன் காணியின் உறு திப் பத்திரம், நிலஅளவை பத்தி ரத்தின்போட்டோபிரதிஎன்பனவிளக்கமாக வழங்கப்பட வேண்டும்.

இந்த மாத முதல் வாரத்தில் மதிப்பீடு குறித்த விவரங்கள் முழுமையாக நகர வதிவிட அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5-ரி-50)

# கற்றலுக்கு இடையூறு செய்தோருக்கு முள்ளியவளை பொலிஸ் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 5

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டவர்களை பொலிஸார் எச்சரித்தனர். முள்ளியவளைப் பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

முள்ளியவளை கிழக்குப் பகுதி பொதுமக்கள் தெரிவித்ததாவது:

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெற்று வருகின்றது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் நெருங்குகின்றது. மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முள்ளியவளை கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்பவர்கள் இரவு 10 மணி வரையில் மிகச் சத்தமாகப் பாடல்களை ஒலிக்கவிட்டு கும்மாளமடித்து வருகின்றனர். அதனால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

முள்ளியவளைப் பொலிஸாருக்கு தொலைபேசியூடாக முறைப்பாடு செய்தோம். சில மணி நேரங்களிலேயே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர். இதன் பின்னர் பாடல் சத்தம் கேட்கவில்லை. அந்த வீட்டில் இருந்தவர்களை பொலிஸார் எச்சரிக்கை செய்துள்ளனர். பொலிஸாரின் செயற்பாட்டால் எமது பிள்ளைகள் இடையூறின்றிக் கற்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது – என்றனர். (ற-5-21-102)

இந்த வாரம் புதுவிதியில்...



● போராளிகளைக் கொல்லும் புற்றுநோய் ஊசி

● கஞ்சா கடத்தல் திகைப்பூட்டும் உத்திகள்

● டியர் புலம்பெயர் 'டமில்ஸ்...'! உறைக்கும் உண்மைகள்

புதுவிதி வாசகர்களுக்கு ரூபா 5000

மேற்பட்ட பரிசிலை வெல்லும் வாய்ப்பு

இன்னும் சிறுகதை, சிறுவர் பகுதி, உலக விடயங்கள் என வாசிப்புக்கு தீனி போடும் பகுதிகள்.

விலை - 20/ = மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கட்சியை இரண்டாக உடைத்து ஆட்சியைத் தக்கவைக்க முயற்சி

## பிரதமர் ரணிலைச் சாடுகின்றார் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார



கொழும்பு, ஓக. 5
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்து ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். அதற்காக மகிந்த அணியுடன் 'டீல்' போடப்பட்டுள்ளது.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க நேற்றுமுன்தினம் குற்றம் சுமத்தினார்.
மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் முற்பகல் பெலவத்தையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் அநுர குமார இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது–
நிதி மோசடி குறித்தான விசாரணைக்காக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வருமாறு ஷிராந்தி ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதையடுத்து மகிந்த ராஜபக்ச, பிரதமர் ரணிலை உடன் தொடர்பு கொண்டார்.
இருவருக்குமிடையலான கலந்துரையாடலின் பின்னர் ஷிராந்தி நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் செல்லவில்லை. மாறாக சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சென்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.
ஷிராந்தியைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குத் தேவையான காரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டன. அறிக்கையும் உரிய வகையிலேயே இருந்தது. நிலமை இப்படியிருக்கையில் அவர் ஏன் கைது செய்யப்படவில்லை? இங்கேதான் டீல் இருக்கின்றது.
தமது மாமாவான ஜே.ஆரின் வழியிலேயே ரணில் இன்று அரசியல் செய்கிறார். அன்று தனது ஆட்சியை நீடித்துக் கொள்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஜே.ஆர். இறங்கினார்.
இதுபோல்தான் இன்று சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி தனது ஆட்சியை பலப்படுத்துவதற்கு ரணில் முயற்சிக்கிறார். பசில் ராஜபக்ச கைது செய்யப்பட்ட கையோடு வைத்தியசாலைக்கு செல்கின் றார். அப்போது இங்கு டீல் இல்லையா?
மகிந்தவின் சகாக்களுக்கு ஊழல், மோசடிகளிலிருந்து தப்பிக்க வேண்டும். அதற்காக பிரதமர் தேவை. ஆட்சியைத் தக்கவைக்க மகிந்தவின் சகாக்களின் உதவி பிரதமருக்குத் தேவை. இந்த இரு அணிகளுக்குமிடையில் தான் இரகசிய ஒப்பந்தம் இருக்கின்றது – என்றார். (ற-5)

## ஜனாதிபதி மைத்திரிபால ஐ.நாவில் உரை



கொழும்பு, ஓக. 5
செப்ரெம்பர் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. பொதுச் சபையின் 71 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.
71 ஆவது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடர் நிகழ்ச்சி நிரல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.
வழக்கமான மரபுப்படி பிரேஸில் ஜனாதிபதி பொதுச்சபையின் விவாதத்தை ஆரம்பிப்பார். பின்னர் அமெரிக்க ஜனாதிபதி உரையாற்றுவார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷ் பிரதமர் ஆகியோரும் பொதுச்சபையில் உரையாற்றுவர்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த முறை பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க மாட்டார். அவருக்குப் பதிலாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சரே இந்தியக் குழுவுக்கு தலைமை தாங்கவுள்ளார். (ற-5)

## ஐரோப்பியரை விட இலங்கையர் மது நுகர்வு ஐந்து மடங்கு அதிகம்

கொழும்பு, ஓக. 5
இலங்கையில் தனிநபர் மதுபான நுகர்வு ஐரோப்பாவை விட ஐந்து மடங்கு அதிகம்.
இவ்வாறு தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகார சபையின் தலைவர் பாலித அபேகோன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
ஆசியாவில் இலங்கையும் தாய்லாந்தும் அதிகளவு தனிநபர் மதுபான நுகர்வில் முன்னிலையில் உள்ளன. இலங்கையில் 35 வீதமான ஆண்களும், 3 வீதமான பெண்களும் மதுபானப் பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.
ஆறு மில்லியன் மக்கள் – இலங்கைச் சனத்தொகையில் 40 வீதமானோர் – மதுபானப் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். 40 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் புகைப்பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.
இலங்கையில் ஒரு கிராம அதிகாரி பிரிவில் உள்ளவர்களால் மாதம் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபா மதுபானத்துக்காகவும், 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா புகைத் தலுக்காகவும் செலவிடப்படுகிறது.
அரசுக்கு ஆண்டு தோறும், புகையிலை மற்றும் மதுபான வரிகள் மூலம் 143 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கிறது. புகையிலை மற்றும் மதுபான பழக்கத்தால் 212 பில்லியன் ரூபா சுகாதார இழப்புகள் ஏற்படுகின்றன.
வெளிநாடுகளில் மதுபானத்துக்கு அடிமையானவர்கள் அதிகம் என்றாலும் அவர்களின் மதுபான நகர்வு குறைவானது. இலங்கையில் மதுபானத்துக்கு அடிமையானவர்கள் குறைவு என்றாலும் அவர்களின் நுகர்வு அதிகமானது.
இளம் சமூகத்தினரை மதுபானத்துக்கு அடிமையாகாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மதுவுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு ஆறு மருத்துவமனைகள் செயற்படுகின்றன.– என்றார். (ற-5)

## இந்தியா - இலங்கைக்கிடையான பாலம் குறித்து கலந்துரையாடல்

### அமைச்சர் கபீர் காசிம் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 5
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்தார்.
இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெறும் 12 ஆவது உலக இஸ்லாமிய பொருளாதார மாநாட்டின் ஓர் அங்கமாக நடைபெற்ற பிராந்திய கூட்டுறவில் தனியார்துறையின் பங்கு என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது–
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலானவர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் பாலத்தை அமைப்பதன் மூலம் வர்த்தகத்தை மேலும் விரிவாக்க முடியும்.
இரண்டு நாடுகளுக்கிடையிலும் பாலத்தை அமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமுள்ளன. இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.– என்றார்.
தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைப்பதற்கான திட்டம் தொடர்பாக இந்திய அரசின் சார்பில் தகவல்கள் வெளியிடப்பட்ட போது அது பற்றி இந்தியா தம்முடன் எந்தப் பேச்சுக்களும் நடத்தவில்லை என்று அரசு கூறியிருந்தது. (ற-5)

## இந்தவாரம் மகிந்த தென்கொரியா பயணம்

கொழும்பு, ஓக. 5
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்த வாரம் தென் கொரியா செல்லவுள்ளார்.
மகிந்த ராஜபக்சவுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் தென்கொரியாவுக்குப் பயணமாகின்றார்.
பயணத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.
மகிந்த ராஜபக்ச ஆட்சியிழந்த பின்னர் சமீப காலமாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். அண்மையில் அவர் உகண்டாவுக்கும், ஜப்பானுக்கும் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.(ற-5)

## இந்திய அரசின் அம்புலன்ஸ் சேவையால் ஏற்படும் பாதிப்புக்கு பொறுப்பேற்கோம்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறுகின்றது

கொழும்பு, ஓக.5
இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நோயாளர் காவு வண்டிகள் மற்றும் அதில் தொழில் வாய்ப்புப் பெற்றோர் போன்றோர் இலங்கை சுகாதார சபையில் பதிவு செய்யப்படவில்லை. அவர்களால் நோயாளிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் எவ்விதமான பொறுப்பையும் ஏற்கமுடியாது.
இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நலிந்த ஹேரத் தெரிவித்தார்.
கொழும்பில் அமைந்துள்ள தொழில்சார் நிபுணர்கள் அமைப்பின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நோயாளர் காவு வண்டி மக்களுக்கு முறையான சேவையை வழங்குமாக இருந்தால் அதனை நாம் எப்போதும் வரவேற்பவர்களாக இருப்போம். தற்போது முறையான சட்டத்திட்டங்களோ அல்லது அவர்களுக்கான ஒழுக்கக்கோவை மற்றும் விதிமுறைகள் தொடர்பிலோ தெளிவற்ற தன்மையே காணப்படுகின்றது. நோயாளர் காவு வண்டிகள் நோயாளர்களின் அவசர மற்றும் தீவிர சிகிச்சைகளின்போது பயன்படுத்தப்படவுள்ளன. இலங்கையின் சுகாதாரத்துறையில் அவர்களும் ஒரு பங்காளிகளாக உள்ளனர் என்பது தெளிவாகின்றது. ஆனால் இவர்கள் இலங்கை சுகாதார சபையாலோ அல்லது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தாலோ முறையாக பதிவு செய்யப்படவில்லை. அவசர தேவைகளுக்காக குறித்த நோயாளர் காவு வண்டிகளைநாடும்நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌரியங்கள் தொடர்பிலோ அல்லது நோயாளர்களின் சுகாதாரம் தொடர்பிலோ நாம் பொறுப்பேற்க முடியாது – என்றார். (ற-5)

## ரயிலுடன் மோதி விபத்து மூன்று இளைஞர்கள் சாவு

கொழும்பு, ஓக. 5
மோட்டார் சைக்கிள் ரயிலுடன் மோதியதில் மூவர் உயிரிழந்தனர்.
குருநாகல் – கனேவத்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையிலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது.
மூவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித் துள்ளனர். ரயில் கடவையில், ரயில் வருவதை அவதானிக்காமல் கடக்க முற்பட்ட போதே விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மூவரது சடலங்களும் கனேவத்த புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்று வெல்லவ பொலிஸார் தெரிவித்தனர்.
பல கோரிக்கைகளை முன்வைத்து பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக் காவலர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ற-5)

## தலைக்கவசத் தடை மீதான இடைக்காலத் தடை நீடிப்பு

கொழும்பு, ஓக. 5
முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்தை அணிவதற்கு விதிக்கப்பட்ட தடை மீதான இடைக்கால தடையுத்தரவு எதிர் வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தாக்கல் செய்யப் பட்டிருந்த 3 மனுக்களை நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது மேல் முறையீட்டு நீதி மன் றம் இடைக்காலத் தடையை நீடித்து உத்தரவிட்டுள்ளது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபவனியில் சிறுவன்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 5
மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க் கட்சியின் நடைபவனியில் சிறுவன் ஒருவன் இணைந்து கொண்டது தொடர்பில் முறைப் பாடுகள் கிடைத்துள்ளன என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.
முறைப்பாடு தொடர்பில் விசா ரணை முன்னெடுக் கப்படவுள் ளது என்று சிறுவர் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் எதிரிவீர குணசேகர தெரிவித் தார்.
இவ்வாறான சம்பவங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவது சிறுவர்களின் மனதளவில் தாக் கங்களை ஏற்படுத்தும் சம்பவம் என்றும் அவர் குறிப்பிட்டார்.
நடைபவனி நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவனின் செயற் பாடுகள் தொடர்பில் அனை வரது கவனமும் திரும்பியுள்ள தோடு, பலதரப்பினரினதும் விமர் சனங்களுக்கும் உள்ளாகி யுள்ளது. (ர-5)

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிடவில்லை

*அரசு பொய் கூறுகின்றது என்று கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக. 5
தகவல் அறியும் உரிமைச் சட்டத் தில் சபாநாயகர் கையெழுத்திட் டுள்ளார் என்று அரசு பொய் சொல்கின்றது. பொய்யான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என்று கேட் டுக் கொள்கின்றோம்.
இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சியி னர் தெரிவித்தனர்.
கூட்டு எதிர்க்கட்சியின் ஏற்பாட் டில் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. அதில் நாடாளுமன்ற உறுப் பினர் தினேஸ் குணவர்தன கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தகவல் அறியும் உரிமைச் சட்டத் தில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையெழுத்திட்டுள்ளார். அதனை வர்த்தமானியில் வெளியிட வேண்டிய நடவடிக்கை மாத் திரமே எஞ்சியுள்ளது. இவ்வாறு ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பதில் பேச்சாள ருமான கயந்த கருணாதிலக ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.
தகவல் அறியும் சட்டமூலத்தில் சபாநாயகர் இதுவரை கையெழுத் திடவில்லை. அமைச்சர் கயந்த கருணாதிலக பொய்யான தக வலை வெளியிட்டுள்ளார். நாங் கள் முன்வைத்த திருத்தங்களை நாடாளுமன்றம் ஏற்றுக் கொண் டுள்ளது. அதனை நீதிச் செயற் பாடுகளுக்குள் உள்வாங்குவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் நாடாளுமன்றம் ஆகிய வற்றுக்கு இடையே காணப்படும் சிக்கல் நிலை காரணமாக இது வரை அந்தச் சட்டமூலத்தில் கையெழுத்திடப்படவில்லை.
அரச திணைக்களங்கள் அந்த சிக்கலுக்கு தீர்வுகாண முடியும். அதனை செய்யாத நிலையில் சபாநாயகர் இதுவரை கையெழுத் திடவில்லை. பொய்யான செய்தி களைப் பரப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். குறிப் பாக நாடாளுமன்றம் தொடர்பில் பொய்யான தகவல்களை பரப்ப வேண்டாம் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.- என்றார். (ர-5)

# ஐ.தே.கவின் 70 ஆண்டு நிறைவு விழா மைத்திரி தலைமையில்

கொழும்பு, ஓக. 5
செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்க உள்ளார்.
70 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் பிரிட்டன், இந்தியா, சீனா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளின் அரச தலைவர்களும் பங்கேற்க உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
பொரளை கெம்பல் மைதானத்தில் கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நடைபெறவுள்ளன. சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் 69 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளும் நடைபெற்றன. (ர-5)

# இனவாதம் பேசுகிறார் வடக்கு முதலமைச்சர்

## இப்படிக் கூறுகின்றார் ஞானசார தேரர்

கொழும்பு, ஓக. 5
வடக்கு மாகாண முதலமைச் சரின் அரசியல் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. அதனால் இனவாதக் கருத் துக்களை அவர் பரப்பி வருகின்றார். இவ்வாறு பொது பலசேனா அமைப்பு குற்றம் சுமத்தி யது.
பொதுபல சேனா அமைப்பின் தலைமை யகத்தில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கருத் துத் தெரிவித்தபோது அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இவ்வாறு குறிப் பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள வர்களுக்கு எதிரான செயற்பாடு கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் பெரும்பான்மையின சிங்கள மக்கள் தொடர்பில் ஏற் றுக்கொள்ள முடியாத தேவை யற்ற கதைகளைப் பரப்பி வரு கின்றார்.
அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அரசமைப்புக் காணப் படுகின்றது. சிங்கள மக்கள் அல்லது சிங்களத் தலைவர்கள் மாத்திரமா அதனை மதித்து நடக்கவேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது. வட மாகாண முதலமைச்சரின் அரசியல் வங்குரோத்து நிலையை அவதா னிக்கக் கூடியதாக இருக்கின்றது.

> சிங்கள மக்கள் அல்லது சிங் களத் தலைவர்கள் மாத்திரமா அதனை மதித்து நடக்கவேண் டும் என்ற கேள்வி எழுந்துள்ளது. வட மாகாண முதலமைச்சரின் அரசியல் வங்குரோத்து நிலையை அவதானிக் கக் கூடியதாக இருக் கின்றது.

தமிழ் மக்களின் அபிலாசை களை நிறைவேற்றுவதற்காக தொடர்ச்சியாக இனவாதக் கருத் துக்களை வெளியிட்டு வருகின் றார். வடக்கில் சிங்களவர்களை குடியேற்றினால் அது மிகப்பெரிய பிரச்சினையாக உருவாகும் என் கிறார். வடக்கி லிருந்து இராணு வத்தை உட னடி யாக வெளியேற்ற வேண்டும் என் கிறார்.
மொரகந்த நீர்ப் பாசனத் திட்டத் தில் நீருக்கான உரிமை வேண்டும். இவ்வாறு பல விடயங்களை கூறிவருகின் றார். நாட்டின் தென்பகுதியையோ அல்லது கொழும் பையோ அறிந் திராத ஒருவரைப் போலவே கதைக்கின்றார். வடக்கில் உரு வாகியிருக்கும் இவ்வாறான இனவாதத்தை தோற்கடிக்க வேண் டும் - என்றார். (ர-5)

# வெளிநாட்டு நாணயம் கடத்த முயன்றோர் கைது

கொழும்பு, ஓக. 5
சட்டவிரோதமாக ஒரு தொகை வெளி நாட்டு நாணயங்களைக் கடத்த முற்பட் டனர் என்று கூறப்படும் இருவர் கட்டு நாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.
நேற்று வியாழக்கிழமை அதிகாலை சிங்கப்பூர் நோக்கிச் செல்லவிருந்த விமானத்தில் இவர்கள் புறப்படத் தயா ராக இருந்தனர் என்று விமான நிலை யத்தின் பிரதி சுங்கப் பணிப்பாளர் பராக் கிரம பஸ்நாயக்க தெரிவித்துள் ளார்.
கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாண யங்களின் பெறுமதி மூன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம் என கூறப்படு கின்றது. கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பைச் சேர்ந்த 35 மற்றும் 49 வயதான இருவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந் துள்ளது.
சம்பவம் குறித்த மேலதிக விசாரணை களை சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ர-5)

# இலங்கை மீனவப் பிரதிநிதிகளை இந்தியா அனுப்புவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஓக. 5
இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந் துரையாடுவதற்காக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமர வீர இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னதாக இலங்கை மீனவப் பிரதிநிதிகள் சிலரை இந்தியாவுக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்த மாத இறுதிக்குள் இலங்கை மீனவப் பிரதிநிதிகள் குழு இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இருநாட்டு மீனவப் பிரச்சினை தொடர்பாக வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளைச் சேர்ந்த மீனவப் பிரதிநிதிகள் அமைச் சர் மகிந்த அமரவீரவை, அவரது அமைச்சில் நேற்று முன்தி னம் சந்தித்துக் கலந்துரையாடினர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி ஆகியோரும் அதில் கலந்து கொண்டனர்.
இந்திய மீன்பிடிப் படகுகளின் பிரவேசம், அந்த நாட்டு மீன வர்களிடம் இருந்து ஏற்படுகின்ற சவால்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
இந்தப் பிரச்சினையை இராஜதந்திர மட்டத்தில் கலந்துரை யாடித் தீர்ப்பதற்காக அமைச்சர் மகிந்த அமரவீர இந்தியா செல்லத் தீர்மானித்திருந்தார்.
இதற்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரை யாட லின்போது மீன்பிடித் துறை அமைச்சர் இந்தியா செல்லும் முன், மீனவப் பிரதிநிதிகளை அங்கு அனுப்புவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ர-5)

# ஐ.தே.கவுடன் கனவிலும்கூட ஒப்பந்தம் செய்யமாட்டோம்

## கூட்டு எதிரணி கூறுகின்றது

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கனவிலும் கூட ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய ஒப் பந்தம் செய்வதை கைவிடவேண்டும்.
இவ்வாறு பொது எதிரணியினர் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.
பொது எதிரணியின் செய்தியாளர் சந்திப்பு - பொறளையிலுள்ள என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும அதில் கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
நடைபவனி என்பது அரசியல் அப்பியா சமாகும். சாரத்தை உயர்த்திக்கொண்டு அநாகரிகமாக சந்தியில் நின்று கசிப்பு அருந்தியபடி கூச்சலிடுகின்றவர்களுக்கு பதிலளிப்பது நடைபவனியின் நோக்கம் அல்ல. இதுவொரு அரசியல் அப்பியாசம். அதன் நோக்கத்தை நாங்கள் நெருங்கி விட்டோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக ஐக்கியம் தேவை என்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் இருக்க வேண்டும்.
கடந்த 27 ஆம் திகதி இந்த இடத்திலிருந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தேன். அடையாளம்காணமுடியாதஒருநோய்இருக் கின்றது. அதற்கான பெயரை கண்டு பிடித் துக் கூறுங்கள்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த 28 ஆம் திகதி பொலனறுவையில் உரையாற் றியபோது எதிர்வரும் 5 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இந்த அரசைக் கொண்டு செல்வோம் எனக் கூறி யிருந்தார். அன்று மாலை கொழும்பில் செய்தி யாளர் சந்திப்பை நடத்திய மேல்மாகாண முதலமைச்சர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி யினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் டீல் செய்துள் ளனர் என்று குற்றம் சாட்டியிருந்தார். இந்த நோய்க்கு என்ன பெயர் என்று மருத்துவர் களே நீங்கள் கூறுங்கள். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் நடைபவனி சென்று மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியு டன் ஒப்பந்தம் செய்கின்றார் என்று கூறு கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆவதுநிறைவாண்டு நிகழ்வில் தலைமை அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எங்கே அந்த டீல் இருக்கின்றது? இந்த நோய்க்கான பெயர்தான் என்ன? நாம் கனவிலும்கூட ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலைத் தோற்கடிப்பதே எமது இலக்கு. நடைபவனி என்பது எமது இறுதிதரிப்பிடம் அல்ல - என்றார். (ர-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சுற்றுச் சூழலை மாசற்றதாக்க பயன் தரும் செயல் வடிவம் வேண்டும்

**நா**டளாவிய ரீதியில் இப்போது-- கடந்த இரண்டாம் திகதி தொடக்கம்-- க.பொ.த உயர் தரப் பரீட்சை நடைபெற்று வருகிறது. ஆயினும் வடக்கின் பல ஆலயங்களில், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல், அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் கத்தித் தொலைக்கின்றன.

அவ்வாறு செய்வது தொடர்பில், ஆலய நிர்வாகங்கள் பலவும், தம்மைக் கேள்வி கேட்க, அவ்வாறு செய்வது தவறு என்பதனைச் சுட்டிக்காட்டி தம்மைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்று, ஒரு வகைசார் நட்டாமுட்டித்தனத்தை மேலுயர்த்துகிறார்கள்!

அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று எச்சரித்துள்ளார், யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன்.

ஆலயங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்கவிடும் நிர்வாகத்தினர் மீது, உடனுக்கு உடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

பொதுமக்களுக்குத் தொல்லை தரும் ஒலிபெருக்கிகள் தொடர்பான பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் எண்பத்தோராம் பிரிவின் பிரகாரமும்--

வணக்க ஸ்தலங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவது தொடர்பில், உயர் நீதிமன்றினால் 'ஆசிக்' வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரமும்-- சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

ஆயினும், வடக்கில் அமைந்துள்ள, வணக்கத் தலங்களில் நீதிமன்றின் பணிப்புரைகள் மீறப்பட்டு வருகின்றன என்று மேல்நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டி உள்ளமை கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்று.

மேலும், கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக, குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் 98ஆம் பிரிவின் கீழ் ஒலிபெருக்கி பாவிக்கக் கூடாது என்ற தடை உத்தரவுகளை இறுக்கமாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று நீதிபதி அவர்கள் பணிப்புரை வழங்கி இருப்பது ஆழமாகத் தொட்டுக்காட்டப்பட வேண்டியதாகும்.

தமிழர்களாகிய எங்களின் அழியாச் சொத்து என்று பல்லாண்டு காலமாகக் கருதப்படுவது கல்வியே. அதன் வழி நாடி இப்போது ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகிய இரண்டும் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன.

அது குறித்த எவ்வகை நாட்டமும் இல்லாமல், ஆண்டு முழுவதும், ஆலயத் திருவிழாக்களில் ஒலிபெருக்கிப் பாவனை மூலமாகவும் சூழல் மாசடையச் செய்யப்பட்டு வருகிறது.

அந்த நிலையைத் துடைத்து எறிவது மிக்கவும் அவசியமும் அவசரமுமானதும் ஆகும்.

வாகனங்களின் இரைச்சல், அவை வெளியேற்றும் புகை மூட்டம் என்பனவற்றுக்கும், கட்டுப்பாடும் அதியுயர் தண்டனையும் தேவை.

சுற்றுச்சூழலை மாசடையச் செய்யும் செயற்பாடுகள் நீதிமன்றங்கள் ஊடாகத் தடுக்கப்பட வேண்டியவையே.

சம்பந்தப்பட்டோர் இவற்றைக் கருத்தில் கொள்வது எப்போது.....?



எம்.ரீ.ஹஸனலி

ஏ.எல்.எம். சலீம்

**கி**ழக்கின் எழுச்சி அமைப்புப் பற்றி, முஸ்லிம்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது. ஆனால் இந்த அமைப்பின் பின்னால் நானிருந்து செயற்படுவதாகக் கூறப்படுவது அபாண்டமாகும். அந்த அமைப்பினர் என்னையும் அல்லவா குற்றம் காண்கின்றனர்?"

இவ்வாறு, முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸனலி தெரிவித்துள்ளார்.

நிந்தவூரிலுள்ள அவரது இல்லத்தில் நீண்ட நாள்களின் பின்னர் அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோதே, ஹஸனலி மேற்கண்ட தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

சந்திப்பைப் பயன்படுத்தி உதயனுக்கு ஒரு சிறப்பு நேர்காணலை செய்யவிரும்புகிறேன் என்பதை அவருக்குத் தெரிவித்தேன்.

இன்று முஸ்லிம்காங்கிரஸுக்குள் எழுந்துள்ள நிலைமைகள், கட்சித்தலைவருடன் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் முஸ்லிம் சமூகத்தின் இன்றைய அரசியல் பரிதாப நிலைமை என்பவை பற்றி செயலாளர் நாயகம் ஹஸனலி என்னுடன் மனம் திறந்து பேசினார்.



எம்.எச்.எம்.அஸ்ரப்

ஆனாலும், கட்சித்தலைமையுடனான முரண்பாடுகள், உட்கட்சிப்பூசல்கள் பற்றியெல்லாம் இப்பொழுது பகிரங்கமாக எவ்வித கருத்தையும் வெளியிடவோ, அவ்வாறான கருத்துக்கள் வெளிவருவதையோ தாம் விரும்பவில்லை என்றும் வலியுறுத்திக் கூறினார்.

"இதற்கெல்லாம் ஒரு தருணம் வரும். அப்பொழுது பல உண்மைகளை, இரகசியங்களை அம்பலப்படுத்துவேன். அப்போது உங்களை நிச்சயம் அழைப்பேன்" என எதிர்வு கூறலொன்றைத் தெரிவிக்கவும் அவர் தவறவில்லை.

சமாதானத் தூதுக்கள் தங்களிடம் அனுப்பப்படுவதாகக் கூறப்படுகின்றதே என்ற எனது கேள்விக்கு சிறுபுன்னகை ஒன்றின் மூலம் பதில் தந்தார் ஹஸனலி.

### தொகுப்பு

தொடர்ந்து நான் முன்வைத்த சில கேள்விகளுக்கு, செயலாளர் நாயகம் ஹஸனலி பின்வரும் பதில்கள் மூலம் தமது கருத்துக்களை வெளியிட்டார். எமதுவிதியை நாமே எழுதுவோம், எனும் கோசத்துடனும், முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டுமெனும் போர்க் கொடியுடனும் கிழக்கில் 'கிழக்கின் எழுச்சி' எனும் அமைப்பு தோன்றியுள்ளது.

> "அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர், முஸ்லிம் தேசியத்துக்கான முன்னெடுப்புக்கள் வெகுவாகக் குறைந்து விட்டதுடன், இந்தப் புறக்கணிப்பு இளைஞர்கள், புத்திஜீவிகள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது."

இந்த அமைப்பின் பிரதித் தலைவராக எனது மகன் அலிசப்ரியும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் சேகுஇஸதீனின் மகன் அஸ்ஸுஹுர் செயலாளர் நாயகமுமாக இருப்பதால், இந்த அமைப்பின் பின்னால் நாங்கள் இருப்பதாகச் சிலர் கதை பரப்பி வருகின்றனர். இது அபாண்டமான பழியாகும். இந்த அமைப்பின் பின்னால் நான்ஒருபோதும் செயற்படவில்லை. அந்த அமைப்பினர் என் மீது கூடக் குற்றம்காண்கின்றனர். அப்படியிருக்க எப்படி என்னை இந்த அமைப்புடன் சம்பந்தப்படுத்த முடியும்?"

### ஏன் உதயமாகியது?

மறைந்த தலைவர் மர்ஹூம், எம்.எச்.எம் அஷ்ரப், முஸ்லிம் காங்கிரஸைத் தாம் ஆரம்பித்த காலம்முதலே, நாட்டில் முஸ்லிம் தேசியம் நிறுவப்பட வேண்டுமென்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தார்.

ஆயுதக் குழுக்களின் அட்டகாசம், பல்வேறு எதிர்ப்புச் சக்திகளின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் முஸ்லிம் தேசியத்தை நிறுவும் பயணத்தை அவர் முன்னெடுத்தார்.

இது முஸ்லிம் இளைஞர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர், முஸ்லிம் தேசியத்துக்கான முன்னெடுப்புக்கள் வெகுவாகக் குறைந்து விட்டதுடன், இந்தப் புறக்கணிப்பு இளைஞர்கள், புத்திஜீவிகள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு எத்தகைய காரணங்கள் கூறப்பட்டாலும், முஸ்லிம் காங்கிரஸ் இதனை முன்னெடுக்கும், என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது.

அதிலும் புதிய அரசமைப்பு மாற்றத்தின் மூலம், நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கப் போகிறது எனப் பேசப்படும் இன்றைய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப் முஸ்லிம் தேசியத்தை நிறுவக் கனவு கண்டவர்

## ‘கிழக்கின் எழுச்சி’ அமைப்புக் குறித்து மனம் திறக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹசனலி

காலகட்டத்தில், முஸ்லிம் தேசியத்துக்கான முன்னெடுப்பு காணப்படவில்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமும் முஸ்லிம் இளைஞர்கள், புத்திஜீவிகளை ஆட்கொண்டுள்ளது. இதனால் முஸ்லிம் காங்கிரஸில் குறை காண்கின்றனர்.

இதன் வெளிப்பாடாகவே ‘கிழக்கின் எழுச்சி’ அமைப்பின் உதயத்தை நான் பார்க்கின்றேன்.

கிழக்கின் எழுச்சி ஓர் எதிர்ப்புச் சக்தியாக இல்லாமல், சகலரையும் அரவணைத்து இதற்கான இணைப்புச் சக்தியாகவே செயற்பட வேண்டும்” எனவும் எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

### அன்றைய தலைமைகள்

“அன்றைய தலைமைகளான சேர் ராசிக் பரீத், பதியுதீன் மஹ்மூத், ஏ.ஸீ.எஸ்.ஹமீத் போன்றோரின் செயற்பாடுகள், கருத்துக்களிலும் முஸ்லிம் தேசியம் தொக்கி நின்றதையும் மறந்துவிட முடியாது.


இதற்காக மர்ஹூம்அஷ்ரப், எம்.ஐ.எம். முகைதீன், சேகு இஸதீன், நான் என நிறையப் பேசியுள்ளோம்.ஆனாலும் கிழக்கின் எழுச்சி அமைப்பினர் என் மீதும் குற்றம் காண்கின்றனர்.

இந்த நிலையில் முஸ்லிம் தலைமைகள், முஸ்லிம் தேசியத்தை அங்கீகரித்து அதற்காக இன்றைய முக்கிய காலகட்டத்தில் இணைந்து குரல் கொடுக்க முன்வர வேண்டும்.”

### தமிழர் - முஸ்லிம்கள்

“நாட்டின் புதிய அரசமைப்பு தேசிய ரீதியான மற்றும் பிராந்திய ரீதியான பிரச்சினைகளை உள்ளடக்கியதாக அமையவிருக்கும் முக்கிய காலகட்டம் இதுவாகும்.

இந்த நிலையில் முஸ்லிம், தமிழ் உறவுகள் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாக, தூய்மையானதாக மிளிர வேண்டியது அவசியமானதாகும்.ஆனால், எமது இரு சமூகங்களையும் சேர்ந்த சில அரசியல் தலைமைகள் ஏட்டிக்குப் போட்டியாக ஊடக அறிக்கைகளை வெளியிட்டு முட்டி மோதிக் கொள்ளும் நிலையையும் இன்று காணமுடிகின்றது.



அம்பாறை கரையோர மாவட்டத்தை தமிழர்கள் ஏற்கப்போவதில்லையென தமிழர் பிரதிநிதி ஒருவர் கூற, வடக்கு - கிழக்கு இணைப்பை நாம் ஏற்க மாட்டோமென முஸ்லிம் அரசியல் பிரமுகர் ஒருவர் கூறி பகிரங்கமாக முட்டிமோதும் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் வேறுபட்ட வித்தியாசமான யோசனையை எமது சமூகங்கள் இரண்டும் முன்வைத்து, முட்டிமோதிக் கொண்டு, எம்மிடையே பிளவு உண்டெனக் காட்டக் கூடாது. இந்தநிலை தொடருமானால், பேரினவாதச் சக்திகள் எம்மைப்பிரித்தாளுவதற்கான வாய்ப்பைக் கொடுத்ததாகவே அது அமையும்.

சுமார் 44 வருடங்களுக்குப் பிறகு கிடைக்கும் சந்தர்ப்பம் இதுவாகும். இதை நாம் தவறவிட்டு, எமது பின் சந்ததியினரும் அல்லல்படும் நிலைக்கு விட்டு விடக்கூடாது”

### எமது தலைமைகள்

எனவே இந்த விடயங்களை எமது தலைவர்கள் கையேற்று, மனம் விட்டுப் பேசி, ஒரே பாதையில் ஒத்த நிலைமையை உருவாக்க வேண்டும்.

இந்த வகையில் அன்று எமது மறைந்த தலைவர் அஷ்ரப், தமிழ்த் தலைவர்களுடன் தொடர்ச்சியாகப் பேசி வந்தார் என்ற வரலாறு உண்டு.

அவ்வாறு தமிழ்த் தலைமைகளான சிவசிதம்பரம், இரா. சம்பந்தன், மாவை. சோ. சேனாதிராசா, நீலன் திருச்செல்வம், சித்தார்த்தன் போன்றவர்களுக்கும், தலைவர் அஷ்ரப்புக்கு மிடையில் பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இதன்போது சில கட்டங்களில் பொது உடன்பாடுகள் எட்டப்பட்டு, அவற்றில் கைச்சாத்திட்ட வரலாறுகளையும் எம்மால் எளிதில் மறந்து விட முடியாது.

எமது இருதரப்புக்களின் தலைமைகளும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எம்மிடையே பிரிவினை கூடாது. இரு தரப்பினரும் பேசி ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்.

அன்றேல் தீர்வு நிரந்தரத் தீர்வாக அமையாது. எமது எதிர்காலச் சந்ததிக்கும் இதே பிரச்சினைகளை விட்டுச்செல்வதாகவே அது முடியும். நிரந்தர அரசியல் தீர்வில் எமது மூவினங்களினதும் சுயநிர்ணயம் மதிக்கப்பட வேண்டும். அன்றேல் நிலைமை பெரிய பிரளயத்திலேயே முடியும்” இவ்வாறு ஹஸனலி தமது கருத்துக்களை வெளியிட்டார்.

---

## மீண்டுமொரு தடவை காதில் பூச்சுற்ற முயல்கிறதா அரசு?

தடுப்பில் இருந்த போராளிகளுக்கு, தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில், இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக ஏதோவொரு ஊசி மருந்து ஏற்றப்பட்டது. அதனால் உடனடியாகவும் நாளடைவிலும் அவர்கள் உடல் நல ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

மேற்கண்ட விதத்தில் நல்லிணக்கச் செயலணியின் முல்லைத்தீவு வலய அமர்வின்போது, முன்னாள் போராளியொருவர் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இத்தனைக்கும் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து பொதுமக்களது கருத்துக்களைக் கேட்டறியும் செயலணியின் அமர்வில் கலந்து கொண்டு மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்திய குறிப்பிட்ட முன்னாள் போராளி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம்தாமும்கூட மேற்குறிப்பிட்ட அனுபவத்துக்கு உள்ளானதாகவும் அதனால் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு வாழ்ந்து வரும் இன்றைய நிலையில் தாமும் உடல் ரீதியாகப் பல தாக்கங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாகவும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து முன்னாள் போராளியொருவரால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பான செய்தி, தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக தடுப்பில் வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளது பெற்றோர், உறவினர்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அத்தகையோர் பன்னாட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் பலதரப்புக்களிலிருந்தும் முன்வைக்கப்பட்டன.

இலங்கை அரசின் பாதுகாப்புப் படைத்தரப்பு மீதான குறித்த குற்றச்சாட்டு சர்வதேச ரீதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமெனக் கருதிய அரசதரப்புக் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் அரசிடம் உரிய வகையில் முறைப்பாடு செய்யப்பட்டால், அது குறித்து உள்நாட்டு விசாரணை மேற்கொள்ளப்படுமென கயிறு திரிப்புச் செய்துள்ளது.

‘காதிலை பூச்சுத்துவது’ என்றொரு தொடர் தமிழில் வழக்கில் உள்ளது. ஏமாறுவோர் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்.

இலங்கை அரசுகளுக்கு எதிராக தமிழர் தரப்புக்களால் கடந்த பல ஆண்டுகளாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றும் முயற்சியாக, காலத்துக்குக்காலம் ஆட்சியில் இருந்த அரசுக்களால் நியமிக்கப்பட்ட விசா ரணை ஆணைக்குழுக்கள், விசாரணை என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து, கடைசியில் கையளித்த உப்புச்சப்பற்ற விசாரணை அறிக்கைகளுக்கு நேர்ந்த கதி தமிழ் மக்கள் அனைவரும் அறிந்ததொன்றே.

இந்த நிலையில் மேற்குறித்த சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டுக் குறித்தும், உள்நாட்டு விசாரணை நடத்த அரசு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளமையானது, தமிழ் மக்கள் காதுகளில் மீண்டும் ஒருமுறை பூச்சுற்றும் நடவடிக்கையேயன்றி வேறென்ன?

*இலங்கை அரசியலின் போக்குக் குறித்து மனம் வெதும்பிக் கவலையுறும் உதயன் வாசகர்.*

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் கத்திக்குத்து; ஒருவர் சாவு; 5 பேர் காயம்

லண்டன், ஒக.5
லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு றுசல் சதுக்கத்தில் கத்திக்குத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் 6 பேர் கத்திக் குத்துக்கு இலக்கானதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதனையடுத்துப் பொதுமக்கள் பாது காப்புடனும், விழிப்புடனும் செயற் படுமாறு பொலிஸ் அதிகாரி அறிவித்



துள்ளார். மூன்று பெண்களும், மூன்று ஆண்களும், காயங்களுக்கு இலக்கானதுடன் 60 வயது மூதாட்டி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந் தவர்களுக்கும், உயிரிழந்தவர்களுக் கும் லண்டன் மேயர் தனது அனு தாபத்தையும் இரங்கலையும் தெரி வித்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் சாட்சிகளோ, சந்தேகங்களோ இருப் பின் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.
நேற்று முன்தினம் இரவு 10.30 மணி யளவில் பொலிஸாருக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டது.
சம்பவ இடத்துக்கு விரைந்த பொலி ஸார், அதனுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 19 வயது இளை ஞரைத் துப்பாக்கிச் சூடு நடத்திக் கைது செய்தனர்.
தாக்கதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. ஆனால், சந்தேகநபரின் உளவியல் பாதிப்பு சம்பவம் இதற்குக் காரணம் எனப் பலரும் தெரிவித்தனர். (த-ரி4)




# சீனாவில் கண்ணாடிப் பாலம்

பீஜிங், ஓக. 5
தென் சீனாவின் குனான் மாகாணத்தில், ரியான்மென் மலைத் தொடரில் கண்ணாடிப்பாலம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய வனப் பூங்காவையும், வானுயர மலைத் தொடரின் காட்சிகளையும் சுற்றுலாப் பயணிகள் காண்பதற்கு வசதியாக இது அமைக்கப்பட்டுள்ளது. 100 மீற்றர் நீளத்திலும், 1.6 மீற்றர் அகலத்திலும் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், வானில் நடப்பதைப் போன்ற உணர்வைத் தரும். குறித்த பாலம் திறக் கப்பட்ட நாள் முதல், நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தவண்ணமுள்ளனர்.
பிரெஞ்சு நிறுவனம் ஒன்று, ரியான்மென் மலைக்குக் கேபிள் கார் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# 104 கொக்கெய்ன் ஆலைகள் கொலம்பியாவில் மாட்டின

*பொலிஸார் அதிரடி நடவடிக்கை*

போகோட்டா, ஓக. 5
கொலம்பியாவில் பொலிஸார் வனப் பகுதியில் இருந்த 104 கொக்கெய்ன் உற் பத்தி ஆலைகளை முடக்கியுள்ளனர். கொக்கோ பயிரிடும் பகுதியில் பொலிஸார் திடீர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். பர்க் என்ற போராளிக் குழுவினரின் வனப் பகுதியில் இந்தத் தேடல்கள் இடம்பெற்றன. குறித்த போராளி அமைப்பின் தலைவர்கள் போதைப் பொருள் கடத்தலை முற் றாக மறுத்து வந்த நிலையில், இந்த அதிரடிச்சோதனை இடம்பெற்றுள்ளது.
குறித்த பகுதியில் இருந்து, வருடாந்தம் 100 தொன் கொக்கெய்ன் உற்பத்தி செய்யப்படுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். போராளிக் குழுவின ரின் நிதி திரட்டும் ஆதாரமாகப் போதைப் பொருள் கடத்தல்கள் இடம் பெற்றுவருகின்றன எனப் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.
கொலம்பியாவில் உற்பத்தி செய்யப் படும் கஞ்சா அயல் நாடானா மெக் ஸிக்கோவுக்குக் கடத்தப்படுவது குறிப் பிடத்தக்கதாகும். (த-ரி4)



# வாகனம் செலுத்திய நாய்

வொஷிங்ரன், ஓக. 5
அமெரிக்காவில் நாய் ஒன்று காரைச் செலுத்தி விபத்து ஏற்படுத்திய சம் பவம் பெரும் பர பரப்பை ஏற்படுத் தியுள்ளது.
கடந்த வெள்ளிக் கிழமை வேர்ஜனி யாப் பகுதியில், நபர் ஒருவர் தனது செல்லப் பிராணிகளுடன் காரில் கடைக்குச் சென்றார். வழ மைபோல நாய் களைக் காரினுள் இருக்கவிட்டு கதவு களைப் பூட்டிச் சென்றார்.



ஆனால் உரிமையாளர் கடைக்குச் சென்றதும், காரை இயக்கி, கியரைப் பேட்டு வாகனம் செலுத்த ஆரம்பித்தது நாய்.
இதன் விளைவாகக் குறித்த நாய் இயக்கிய கார், கடையின் சுவரில் மோதி நின்றது. அங் கிருந்த மக்கள் அலறி அடித்து ஓடினர். இதன் போது, நாய் வாகன ஓட்டி என்பதை அறிந்து மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். இந்த விபத்தில் பெரிய அளவு சேதங்கள் இடம் பெற வில்லை. நாயும் உரிமையாளரும் பாது காப்பாக மீண்டும் வீடு சென்றனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சு வா
# சிரியாவி
## 33 பேருக்கு

டமஸ்கஸ், ஓக. 5
சிரியாவில் இட்லிப் மாகாணத்தின் சராக் பகுதியில், இரசாயன வாயுத் தாக்குதல் இடம்பெற்றதாக, போராளிகள் பகுதியில் உள்ள மீட்புப் படையினர் தெரிவித்தனர்.
இந்தத் தாக்குதலால் 33 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப் பட்டது.
ரஷ்ய விமானங்கள் சுட்டு வீழ்த் தப்பட்டுச் சில மணி நேரங்களில், உலங்குவானூர்தி மூலம் வாயு பரல்கள் வீசப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.
இந்தத் தாக்குதலின் பின்னணி யில் ஜனாதிபதி அசாத் இருப் பதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், தாக்குதலில் தாம் இரசாயன ஆயு தங்களைப் பயன்படுத்துவ தில்லை என அவர் மறுத்துள்ளார்.
சிரியாவின் பொதுமக்கள் பாதுகாப்புப் பணியக ஊடகப் பேச்சாளர் கூறுகை யில்,
பெண்கள், சிறுவர்கள் உட்பட 33 பேர் இரசாயன வாயுவால் பாதிக்கப்பட்டுள் ளனர். நடுத்தர அளவுடைய பரல்கள்


வானில் இருந்து
பகுதி முன்னர் ஒரு
வாயுவினால் தாக்



இட்லிப் மாகாணத்
வாயுத் தாக்குதல்
பெற்றன-என்றார்.
தன்னார்வத் தொ
ஒன்று பாதிக்கப்பட்
உதவியதுடன், இனை

# மும்பை-கே
# ஆற்றில் வி
## 20 பேரைக் காண

புதுடில்லி, ஓக.5
இந்தியாவில் மும்பை - கோவா நகரங் களுக்கிடையில் உள்ள தொடுப்புப் பாலம் நேற்றுமுன்தினம் காலை உடைந்ததில் 20 பேர் காணாமற்போயுள்ளதாகத் தகவல் கள் வெளியாகியுள்ளன.
இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் பலத்த மழை பெய்து வருவதால், விபத்துச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன.
வெள்ளத்தால் நிரம்பிய ஆற்றுக்குக் குறுக்காக உள்ள பாலத்தில், பயணிகளை ஏற்றிக்கொண்டு 2 பஸ்கள் பயணித்தன. இதன்போது பாலம் இடிந்து விழுந்த தால், பலர் காணாமற்போயுள்ளனர். அத்துடன் விபத்து இடம்பெற்ற பகுதியில் வாகனத் தையோ, பயணிகளையோ மீட்புப் படையினர் இனம் காணவில்லை என்றும், அனைவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தொடர்ந்து கனமழை பெய்வதால், மீட்புப்பணி தாம தித்ததுடன், வாகனங்கள் திருப்பி அனுப் பப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.
இடர் முகாமைத்துவ நிலையத்தினர் தெரி விக்கையில்,
100 க்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் சம் பவ இடத்துக்கு விரைந்தனர். பருவப் பெயர்ச்சி மழை காரணமாக சாவித்திரி ஆற்றில் அமைந்துள்ள பாலம் உடைந்த தில் இரு பஸ்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன எனக் கூறினர். (த-ரி4)



# ...வாயு பரல் வீசி ...வில் தாக்குதல்

## ...துப் பாதிப்பு

...து வீசப்பட்டன. சராக் ... ஒரு முறையும் நச்சு ...ாக்கப்பட்டது. ஆனால்





...னத்தில் 9 முறை நச்சு ...தல் சம்பவங்கள் இடம் ...ரார்.

...தொண்டு நிறுவனம் ...பட்ட பொதுமக்களுக்கு ...இணையத்தில்காணொலி ஒன்றையும் பதிவேற்றியுள்ளது. குறித்த காணொலியில், மக்கள் சுவாசிக்க அவதிப்படுவதும், சுவாசக் கருவி மூலம் சுவாசிப்பதும் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து ரஷ்யா எதுவும் தெரிவிக்கவில்லை.

ஐ.நா. தீர்மானத்தின்படி, இரசாயன வெடிபொருள்கள் மற்றும் நச்சு வாயுக் களைத் தாக்குதல்களில் பயன்படுத் தலாகாது. இதனால் நேற்று முன்தினம் இடம்பெற்ற நச்சு வாயுத் தாக்குதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

நச்சு வாயுத் தாக்குதல் தொடர்பில் அறிக்கையை எதிர்பார்ப்பதுடன், நச்சுவாயுப் பயன்பாடு உண்மை என நிரூபிக்கப்பட்டால், இது மிகவும் பாரதூரமான விடயம் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்தார்.

சிரியாவுக்கான பிரிட்டன் மனித உரிமை அவதானிகர்கள், கடந்த திங்கட்கிழமை இரசாயன வாயு பரல்கள் வீசப்பட்டதாகத் தெரிவித்தனர்.

முன்னதாக, ரஷ்ய உலங்கு வானூர்தி தாக்கப்பட்டதால் 5 ரஷ்ய படையினர் உயிரிழந்த னர். இதனை அடுத்துச் சில மணி நேரங்களில் இந்த நச்சு வாயுத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து எந்தத் தரப்பும் பொறுப்புக் கூறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

# 75ஆவது திருமண ஆண்டை கொண்டாடிய அமெ. தம்பதியினர்



வொசிங்ரன், ஓக. 5

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஒரு தம்பதியினர் தமது 75ஆவது திருமண ஆண்டு நிறைவைக் கொண்டாடியுள்ளனர். கார்ல்-எலிசபெத் என்ற தம்பதியரே இவ்வாறு தமது காதலைப் புதுப்பித்தவர்களாவர்.

முதியோர் பராமரிப்பு நிலையத்தில் இருக்கின்றனர். இவர்களின் திருமண ஆண்டு நிறைவு, பராமரிப்பு நிலையத்தினரால் கொண்டாடப்பட்டது. விசேட வழிபாடுகள் நடத்தி அவர்களுக்குக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 75 வருடங்களாக எம் இருவருக்குமிடையில் அன்பும்-நேர்மையும் இருந்தது என எலிசபெத் கூறினார். இந்தக் கொண்டாட்டத்தில் பராமரிப்பு நிலைய ஊழியர்கள் பங்கு கொண்ட துடன், உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பள்ளிப் பருவத்தில் காதலித்த கார்ல்-எலிசபெத், பின்னர் திருமணம் செய்து கொண்டனர் ஆயினும், போர்ச்சூழல் காரணமாகப் பிரிந்து வாழ்ந்தனர். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் இருந்தது. அவர்களுடைய மகள் 2015ஆம் ஆண்டு நோய் காரணமாக உயிரிழந்ததை அடுத்து, அவர்கள் காப்பகத்தில் வாழ்ந்து வருகின்றனர். (த-ரி4)

# ...காவா பாலம் உடைந்து ...விழுந்தது பயணிகள் பஸ்

## ...னவில்லையென அச்சம்



# தற்கொலைத் தாக்குதலில் லிபியாவில் 18 பேர் சாவு

திரிபோலி, ஓக.5

லிபியாவின் பென்காசி நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தற் கொலைப் படைத் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அல்-குவர்ஷா பகுதியில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்தனர். சம்பவம் இடம்பெற்ற பகுதியில், இஸ்லாமியப் போராளிக் குழுவும், இராணுவத்தினரும் போர் புரிந்து வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு பென்காசியைச் சேர்ந்த சூரா புரட்சி அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இஸ்லாமியப் போராளிகளுக்கு எதிராக இராணுவத்தினர் போராடுவதை அடுத்து, பென்காசியில் அமைந்துள்ள பாதுகாப்பு படையினரைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் ஒரு வாரத்தில் இடம்பெற்ற நான்காவது குண்டு வெடிப்பு. ஆனாலும் இது பலம் வாய்ந்தது என்றும், பலர் உயிரிழந்துள்ளனர் எனவும் இராணுவத் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

வெடிப்பு இடம்பெற்ற பகுதியில் இருந்த 10 வாகனங்கள் சேதமடைந்தன. 4 இரா ணுவ அதிகாரிகள் உடபடப் பல இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில், லிபியாவில் தற்போது 6 ஆயிரம் போராளிகள் பரவியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அதிகரித்து வரும் போராளிகளைக் கட்டுப்படுத்த லிபிய அரசு போராடி வருகின்றது.

அத்துடன் அண்மையில் ஐ.எஸ்ஸுக்கு எதிரான தாக்குதல்களையும் லிபிய அரசு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

## கடகம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழுசுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

### புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் வரை



சேவை மனப்பான்மையுடன் செயல்படும் கடகராசி அன்பர்களே! தேசப்பற்று உங்கள் மனதில் இயல்பாகவே குடிகொண்டிருக்கும். செயலில் சுறுசுறுப்பும், வேகமும், விவேகமும் கலந்திருக்கும். அதனால் வெற்றிக் கொடி நாட்ட விரும்புபவர்கள் உங்களை பக்க பலமாக வைத்துக்கொள்வர்.

அதேபோல் நீங்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உங்களைச் சார்ந்தவர்களையும் மாற்றி விடுவீர்கள். தொல்லை கொடுத்தவர்களை கடைசிவரை மறக்க மாட்டீர்கள். அதை வெளிக் காட்டிக் கொள்ள விரும்பாதவர்களும் உண்டு. உடலில் ஏதாவது ஒரு சிறுதொல்லை வந்தாலும் உடனே பயந்து விடுவீர்கள்.

களத்திர ஸ்தானாதிபதி சனியின் சஞ்சார பலத்தைப் பொறுத்தே, உங்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கைத் துணையும், சிறந்த எதிர்காலமும் அமையும். சூரிய பலத்தைப் பொறுத்தே பணவரவுகளை அறிந்து கொள்ள முடியும். குருவின் பார்வை மற்றும் குரு பலத்தைப் பொறுத்தே உங்களது அரசியல் வாழ்க்கையும், பொது நலத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இப்பொழுது வந்திருக்கும் குரு, வெற்றிகள் ஸ்தான குருவாகும். எனவே உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்கும் நிலை, அம்சத்தில் அது பார்க்கும் கிரகம், நடக்கும் திசை, புத்தி ஆகியவற்றை ஆராய்ந்து, அதற்குரிய அமைப்பு எந்தெந்த நேரங்களில் செயல்படும் என்பதை அறிந்து செயல்பட்டால் வாய்ப்புகளை வசமாக்கிக்கொள்ளலாம்.

வளர்ச்சி தரும் குருப்பெயர்ச்சி!உங்கள் ராசிக்கு 2ல் சஞ்சரித்து வந்த குருபகவான், 2.8.2016 முதல் 3ம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இது முன்னேற்றத்தைக் குறிக்கும் இடமாகும்.

உங்கள் ராசிக்கு 6,9 ஆகிய இடங் களுக்கு அதிபதியான குரு, மூன்றாமிடத்தில் சஞ்சரித்து 7,9,11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அதன் பார்வை பதியும் இடங்களெல்லாம் பலன் தரும் இடங்களாக மாறும். அந்தந்த ஆதிபத்தியங்களில் இதுவரை நடைபெறாத செயல்கள் யாவும் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். பொதுவாக மூன்றாமிடம் என்பது உடன்பிறப்புகள். வெற்றி வாய்ப்புகள், அஞ்சாநெஞ்சம், பொழுதுபோக்கு, கனவுகள், பணியாளர்கள் பிரச்சினை, மிகநெருங்கிய உறவினர்கள் பற்றிய தகவல்களையெல்லாம் அறிந்து கொள்ள உதவும் இடமாகும். அப்படிப்பட்ட இடத்திற்கு, எதிரிகள் ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் 6ம் இடத்திற்கு அதிபதியானவர் வரும் பொழுது, என்னவெல்லாம் மாற்றம் ஏற்படும் என்பதை நீங்கள் அறிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

அதே நேரத்தில் ஒன்பதாமிடத்திற்கும் அதிபதியானவர் குரு என்பதால், மலை போல் வந்த துயர் பனிபோல் விலகும் என்றே சொல்லலாம். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் வாய்ப்புகளும் உருவாகும்.

நவக்கிரகங்களில் சுப கிரகம் என்ற வர்ணிக்கப்படும் குரு 3ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வாழ்வில் வளம் காணப் போகிறீர்கள். சொந்த பந்தங்கள் செய்யாத உதவியை நண்பர்கள் செய்வார்கள். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். உடன் பணிபுரிபவர்களின் உபத்திரவம் அகன்று உத்தியோக முன்னேற்றம் காண்பீர்கள். கடன்சுமை குறைய நூதன முறையைக் கையாளப்போகிறீர்கள். தலைக்கு மீறிய கடன் இருக்கிறதே என்ற கவலை, தனவரவால் நிவர்த்தியாகும்.

*(தொடரும்)*

---

# வீடுதோறும் புதினாக்கீரை நட்டு பயன்பெறுவோம்

ப.அருந்தவம்



உலகம் முழுவதும் உணவுக்காகவும் மருத்துவப் பயன்பாடுகளுக்காகவும், அழகுப் பராமரிப்புக்காகவும் தீமைசெய்யும் அங்கிகளிலிருந்து வீட்டைப் பாதுகாப்பதற்கும் புதினா வளர்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை சகல சந்தைகளிலும் கடை வீதிகளிலும் தெருவோரக் கடைகளிலும் கட்டுக்கட்டாகப் புதினாக் கீரை கிடைக்கிறது. எமது பிரதேசத்தில் பூட்சிற்றிகளில் மட்டுமே இதை வாங்கக் கூடியதாக உள்ளது.

எமது பிரதேசத்தில் சிறப்பாகச் செய்கை பண்ணக்கூடியதாகவும் அதிக கவனிப்பின்றி வீட்டுத்தோட்டத்தில் செய்கைபண்ணிசிறந்த விளைவைப் பெறக் கூடியதாகவும் இந்தக் கீரை காணப்படுகிறது. இக்கீரையின் பயனை அறியாததினாலேயே இக்கீரையை எமது மக்கள் நாடுவதில்லை.

### புதினாவின் பயன்கள்

அசைவ உணவுகள் மற் றும் கொழுப்புள்ள உணவுப் பொருள் களை எளிதில் சமிபாடடையச் செய்யும் ஆற்றல், புதினா இலைகளுக்குண்டு. எனவே சமைக்கும்போது புதினா இலை சேர்த்து சமைப்பது சிறப்பானது.

இரத்தத்தைச் சுத்திகரிக்கும் ஆற்றல், வாய் நாற்றத்தை அகற்றும் ஆற்றல், பசியைத் தூண்டும் ஆற்றல், மலச்சிக்கலைத் தீர்க்கும் இயல்பு, பெண்களின் மாதவிடாய்ப் பிரச்சினையை தீர்க்கும் ஆற்றல் போன்றன புதினாவுக்கு உண்டு. ஆண்மைக்குறைவை நீக்கும். முழுமையான இல்லற இன்பத்தை அனுபவிக்கவும் இக்கீரை உதவுகிறது.

மஞ்சள் காமாலை, வாதம், வறட்டு இருமல், சோகை, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கு புதினாக்கீரை அருமருந்தாகும். முகப்பரு உள்ளவர்களும் வரண்ட சருமம் உள்ளவர்களும் இதன் சாற்றை முகத்தில் தடவி வர பலன் கிடைக்கும்.

புதினா இலைகளை நீர் விடாமல் அரைத்து வெளி உபயோகமாகப் பற்றுப் போட்டால் கீல்வாதவலி, தலைவலி, நரம்புவலி, தசைவலி என்பன ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும்.

புதினாவை நிழலில் காயவைத்து பாலுடன் சேர்த்து கொதிக்க வைத்து தேநீருக்குப் பதிலாக அருந்துவதால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதாகவும் சுதேச மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வயிற்றுப்போக்கு உள்ளவர்கள் புதினாக்கீரைத் துவையலைச் சோறுடன் சேர்த்து உள்ளெடுத்தால் வயிற்றுப் போக்கு கட்டுப்பாட்டிற்குள் வரும். புதினாக் கீரை கர்ப்பிணிப் பெண்களின் வாந்தியை நிறுத்த ஒரு கைகண்ட மருந்தாகும்.

புதினா இலைகளை நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு நீர்சேர்த்து 60 மில்லிலீற்றர் வரை மூன்று வேளை பருகிவர காய்ச்சல் தணியும்.

பொடுகுத்தொல்லையால் அவதியுறுபவர்கள் புதினாச்சாறு, உள்ளிச்சாறு, எலுமிச்சைச்சாறு என்பவற்றைக் கலந்து தலையில் ஊற்றி சிறிது நேரம் ஊறிய பின்னர், தலை கழுவினால் பொடுகுத்தொல்லை மறைவதுடன் கூந்தலும் பளபளப்பாகத் திகழும்.

வீடுதோறும் எலி மற்றும் பல்லிகளின் தொல்லை உள்ளவர்கள் இவை நடமாடும் பிரதேசங்களில் புதினா இலைகளை வைத்துவிட்டால் இவை அவ்விடங்களைத் தவிர்க்கும். எனவே எலி, பல்லித் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும் புதினாவைப் பயன்படுத்தலாம். புதினா நடப்பட்ட வீடுகளை பாம்பு மற்றும் விச ஜந்துகள் அணுகுவதில்லையாம்.

### புதினா இனங்கள்

வயற்புதினா, கார்ன் புதினா, ஜப்பானிய புதினா, ஷிவாலிக் புதினா, கோசி புதினா, பெப்பர் மின்ட் புதினா என சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட வகைப் புதினாக்கள் பயன்பாட்டில் உள்ளன. பெப்பர் மின்ட் புதினாவே பெரும்பாலும் சந்தையில் உண்டு. இது பூண்டு இனத்தைச் சேர்ந்தது.

சுமார் பன்னிரண்டுசென்ரி மீற்றர் வரை வளரக் கூடியது. தண்டு சிவப்பு நிறமுடையது. இதன் இலைகள் பச்சை நிறமுடையதாகக் காணப்படுவதுடன் மிளகு வாசனையும் காணப்படும்.

நாம் கடையில் வாங்கிய புதினாக்கீரைக் கட்டின் இலைகளைச் சமையலுக்குப் பயன்படுத்திய பின்னர் மீதமுள்ள தண்டுப் பகுதியை சரியான வகையில் தயார் செய்த சாடிகளில் இரண்டு அங்குல இடைவெளியில் நடலாம். குறைந்தது தரைக்குக் கீழ் இரண்டு கணுக்கள் புதையுமாறும் தரைக்கு மேல் நான்கு கணுக்கள் இருக் குமாறும் நடுகை செய்வது சிறப்பா னது. புதினா நட்டு நான்கு முதல் ஆறு நாள்களில் இலைகள் துளிர் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மை ஒரு நாள் உ(றைக்கும்)றுத்தும்

அன்ரனி பீற்றர்

பிள்ளை அடம்பிடிக்கிறான் என்று தாய் தன் பிள்ளைக்கு சோறு ஊட்டாமல் விடுவதில்லை. நாம் வளர்க்கும் நாய்க்குட்டியே சில வேளை எம்மைக் கடிக்க வந்தால் அதற்கு அடிபோட்டு பயப்படுத்தாமலும் விடுவதில்லை. பால்கறக்கும் கறவைப் பசு காலைத்தூக்கி எமக்கு அடித்தால் வளர்த்துப் பயனில்லை என்று அடித்துத் துரத்தி ஓடுகாலியாக விடுவதில்லை. நெல்லு விதைத்துப் பராமரித்தோமே. அதிகம் புற்கதிராக உள்ளதே என்று வேளாண்மையை அறுவடை செய்யாமல் விடுவதில்லை. அப்படி விட்டு விடுவோமாக இருந்தால் எம் வாழ்வு பயனற்றதாகவே இருக்கும். இவ்வாறு தான் எம்முடைய முதுபெரும் சொத்தான கல்வியில் ஏற்படும் சிறுசிறு தவறுகளையும் பிழைகளையும் தூக்கிப்பிடித்து பெரிதுபடுத்துவோமாக இருந்தால், நாம் எம்மை அறியாமலே எம் சமுதாயத்தை அறியாமை இருளுக்குள் தள்ளி விடுகின்றவர்களாக மாறுகின்றோம்.

ஏன் இப்படியான ஓர் இழிநிலை எம்மத்தியில் வந்து புகுந்தது? என்று நோக்குவோமாக இருந்தால், பல காரணங்கள் இருந்தபோதும் சிறுபராயமாகக் குழந்தை இருக்கின்றபோது பெற்றோர்கள் பின்பற்றுகின்ற ஆன்மிக மனிதநேய வார்த்தைகள், செயற்பாடுகள் உறவுமுறைகளைக் குழந்தை தனதாக்கிக் கொண்டு, அதன் வழி பிற்காலத்தில் நடக்கின்றது. அத்துடன் உண்மை நிலையை பிள்ளைக்கு உணர்த்தாமல் சமூகக் கௌரவத்துக்காக போலிமுகத்தோடு வாழ்வதையும் பிள்ளைஅறிந்து வைத்து, அவ்வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும்போதும் பிள்ளைகள் தவறான வழிமுறைகளைத் தேர்ந்து கொள்ள வழி ஏற்படுகின்றது. திறந்த தொழில்நுட்ப வலைப்பின்னல், நவீன தொழில்நுட்ப சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், இவைகள் எல்லாம் மாணவர்கள் மேல் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனாலே கல்வியின் பெறுமதி, கல்வியின் எதிர்காலப்பயன் கண்ணியமான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் தொழில் உறுதிப்பாடு இன்னோரன்ன விடயங்களை மாணவப்பருவத்திலே விளங்கிக் கொள்ளாத ஏனோ தானோ என்ற போக்குகளே உருவாக்கி விடுகின்றன.

கிராமங்களிலே சொல்லுவார்கள் "முறித்து வளர்க்கா முருங்கையும் அடித்து வளர்க்காத பிள்ளையும் அதிக பயனைத் தரா" என்று. பைபிளிலே ஒரு பழமொழி உண்டு. "பிரம்பைக் கையாளாதவன் தன்மகனைப் பகைக்கிறான்", "அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டான்", "அடியாத மாடு படியாது", அடித்துத் தட்டி நெருப்பிலே உலையிட்டுத்தான் அழகுநிறை ஆபரணங்களாக பொன், வெள்ளி நகைகள் உருவாகுகின்றன. நிலத்தைக் கொத்தி, உழுது, பண்படுத்தி விதையை விதைகக்கின்றபோதே, அதிக பயன் கிடைக்கின்றது. மிருகங்களைக் கட்டி வளர்க்காவிட்டால் கட்டாக்காலிகளாக அடங்காத்தனமாக ஆள்களை தாக்கவே செய்யும். மனித வாழ்விலும் பயனுள்ள வகையான உருவாக்கத்தில் கஷ்டங்கள்–சங்கடங்கள், பாதிப்புக்கள் ஏற்படவே செய்யும். எனவே இவை வேண்டுமென்று செய்யப்படுகின்றவை என்று ஒட்டு மொத்தமாக நாம் ஒதுக்குவோமாக இருந்தால் எம்வாழ்வு பாதிப்புக்கு உள்ளாகவே செய்யும். தவறுகள், பிழைகள் ஏற்படாமல் எதுவும் முழுநிறைவாக ஏற்படமுடியாது. தவறுகளைத் திருத்தி பிழைகளை மேலும், மேலும் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது சமூகப்பிரஜைகள் அனைவரின் கடமையாகும்.

எம் உரிமைகளைப் பெற்று, வாழ எம் எல்லோருக்கும் உரிமை உண்டு. அதேவேளை எம் கடமைகளைச் சரிவரச் செய்கின்றோமா? என்று அடிக்கடி எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். தவறு விடாத மனிதர்களே உலகில் இல்லை. அப்படித்தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென்று கும்பலோடு சேர்ந்து கோசமிடுவோமாக இருந்தால் எல்லோரும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. தண்டனை திருந்துவதற்காகவேயன்றி, ஆளை இல்லாமல் செய்வதற்கல்ல. இன்று பரவலாகப் பேசப்படும் விடயம், ஆசிரியர்கள் தவறு செய்கின்றார்கள், அவர்கள் துரோகிகள் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் – உச்ச தண்டனை கொடுக்க வேண்டும் என்பது. கடவுளைத்தவிர, மனிதனுக்குத் தண்டனை கொடுக்க எவருக்கும் தகுதியில்லை.

ஆசிரியர்என்ற வரைவிலக்கணம் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, மாணவனுக்கு சீடனுக்கு துறைசார்ந்து கற்க விரும்புபவனுக்கு, தொழிலைக் கற்க விரும்புபவனுக்கு நிபுணத்து வத்தை அடைய விரும்புபவனுக்கு கற்பிக்கும் – வழிப்படுத்தும் ஆற்றல் கொண்டவரே ஆசிரியர். எனவேதான் சொல்லவார்கள் "குருவில்லா வித்தை பாழ்" அதாவது பயனற்றது என்று எந்த நிபுணத்துவமாக இருந்தாலும், எம்மிலும் மேற்பட்ட ஒருவரின் ஆலோசனை வழிகாட்டலிலேதான் பயனுடையதாக அமைகின்றது. எனவே நாம் அறிவை அடைந்து கொள்ள எம்மை வளப்படுத்தியவர்கள் எல்லோரும் ஆசான்களே. அவர்களை வணங்கி நாம் மதிக்காவிட்டால், எம்வாழ்விலும் ஒருநாள் உண்மை உறுத்தும், உண்மை உறைக்கும். அப்போதே எம் பிழையை உணர்வோம். முற்காலத்திலே முனிவர்கள் சீடர்களைச் சாபமிட்டுச் சபித்திருக்கின்றார்கள். அதனால்தான் கூறுவார்கள். 'குருநிந்தை கெடும் சிந்தை' என்று. வள்ளுவர் கூற்றுக்கிணங்க 'கற்பவை கற்றபின்' அதன்படி ஒழுகி, பண்புள்ளவர்களாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்க நல்லது செய்ய முற்படுவோம்.

> **"தவறுகள், பிழைகள் ஏற்படாமல் எதுவும் முழுநிறைவாக ஏற்பட முடியாது. தவறுகளைத் திருத்தி பிழைகளை மேலும் மேலும் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சமூகப்பிரசைகள் அனைவரின் கடமையாகும். எம் உரிமைகளைப் பெற்று, வாழ எம் எல்லோருக்கும் உரிமை உண்டு. அதேவேளை எம் கடமைகளைச் சரிவரச் செய்கின்றோமா? என்று அடிக்கடி எம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். தவறு விடாத மனி தர்களே உலகில் இல்லை.**

*கட்டுரையாளர்:*
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்நன்றி மறந்த வேடன்

ஒரு வேடனைப் புலி துரத்தியது. அவன் ஓடி ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். புலி அந்த மரத்தின் கீழே இருந்து கொண்டு அந்த மரத்திலிருந்த குரங்கைப் பார்த்து " அந்த வேடனைக் கீழே தள்ளிவிடு. அவன் நம்மையெல்லாம் கொல்பவன் பொல்லாதவன்" என்றது.

" பொல்லாதவன் ஆனாலும் பயந்து என்னிடம் வந்தவனைக் கீழே தள்ளமாட்டேன் " என்று மறுத்துவிட்டது குரங்கு. புலி அங்கேயே கீழே படுத்திருந்தது.

வேடன் பசியோடு இருந்ததால் அவனுக்குப் பழங்கள் பறித்துவர குரங்கு போனது.

அப்போது புலி வேடனைப் பார்த்து "அந்தக் குரங்கின் குட்டியை கீழே தள்ளி விடு; உன்னை விட்டுவிடுகிறேன்" என்றது.

வேடன் குரங்குக் குட்டியை கீழே தள்ளிவிட்டான்.



குரங்கு பழங்கள் கொண்டு வந்தவுடன் அதைப் பார்த்து ஏ குரங்கே! அவனுக்கு உதவி செய்த உன் குட்டியைக் கீழே தள்ளினானே! இன்னும் அவனுக்கு உதவி செய்யலாமா? அவனைக் கீழே தள்ளிவிடு. உன் குட்டியை விட்டுவிடுகிறேன்'' என்றது புலி. அவனைத் தள்ள மறுத்து விட்டது குரங்கு.

"தீயவனுக்கு உதவுகிறாய். அதனால் உனக்குக் கேடு உண்டாகும்" என்று சொல்லி குரங்குக் குட்டியைத் தின்னாமல் போய்விட்டது புலி.

குரங்கு கொண்டு வந்த பழங்களை வேடன் தின்றுவிட்டு, தன் மனைவி மக்களுக்கு உணவு இல்லை என்று நினைத்து குரங்கு தூங்கியபோது அதைக் கொன்றுவிட்டுப் பழங்களை எடுத்துச் சென்றான் வேடன்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1100 - இங்கிலாந்தின் அரசராக முதலாம் ஹென்றி வெஸ்ற்மினிஸ்டர் தேவாலயத்தில் முடி சூடிக்கொண்டார்.

1583 - வட அமெரிக்காவில் முதல் ஆங்கில குடியேற்றம் சேர் ஹம்பெரி கில்பேர்ட்டால் ஸ்தாபிக்கப்பட்டது.

1861 - கசையடித் தண்டனையை அமெரிக்க இராணுவம் இல்லாமல் செய்தது.

1874 - அஞ்சல் சேமிப்பு நடைமுறையை ஜப்பான் தொடங்கியது. இதை அடியொற்றி ஐக்கிய ராஜ்சியத்திலும் இதே முறைமை தொடங்கப்பட்டது.

1884 - நியூயோர்க் துறைமுகத்தில் சுதந்திர சிலைக்கான அடிக்கல் நடப்பட்டது.

1914 - முதல் மின்சார போக்குவரத்து சமிக்ஞை விளக்கு கிளீவ்லாண்ட் ஒஹியோவில் அமைக்கப்பட்டது.

1940 - ரஷ்யா லத்வியாவை முறைப்படி இணைத்துக் கொண்டது.

1941 - இரண்டாம் உலகப்போர் ஜேர்மனி 300,000 சோவியத் செம்படையினரை கைதியாக்கியதன் மூலம் ஸ்மோல்ன்ஸ்க் போர் முடிவுக்கு வந்தது.

1943 - இரண்டாம் உலகப்போர் நாஸி எதிர்ப்பால் ஈவா மரியா புச் பேர்லின் புளெட்ஷென்சீ மறியலில் வைத்து தலை துண்டிக்கப்பட்டார்.

1944 - ஆஸ்திரேலியா நியூசவுத் வேல்ஸ் கொவ்றா நகர் புறச் சிறைச்சாலையிலிருந்து 545 ஜப்பானிய போர்க் கைதிகள் தப்பும் முயற்சியில் ஈடுபட்டனர்.

- இரண்டரம் உலகப்போர் போலந்து எதிர்ப்பாளர்களால் வோர்ஷோவிலுள்ள ஜேர்மனிய வதை முகாமிலிருந்து 348 யூத சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

- போலந்து வோலாவில் நாஸிகளால் ஒருவாரகால படுகொலை தொடங்கப்பட்டது. குடிமக்கள், கைதிகள் உட்பட 40,000 தொடக்கம் 100 000 பேர் வரை படுகொலை செய்யப்பட்டனர்.

1949 - ஈக்குவடோர் புவியதிர்ச்சியில் 50 நகரங்கள் அழிவடைந்ததுடன் 6,000 பேர் வரை உயிரிழந்தனர்.

1949 - மொன்டனா மான்திச் தீயில் 13 தீயணைப்பு படைவீரர்கள் உயிரிழந்தனர்.

1962 - தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலா சிறையிலிடப்பட்டார். 1990 வரை அவர் விடுவிக்கப்படவில்லை.

1969 - செவ்வாய்க்கு அருகில் (3.524 கி.மீ) மரீனர் 7 விண்கலம் பறந்தது.

1963 - அணு பரிசோதனை தடை ஒப்பந்தத்தில் அமெரிக்கா, ஐக்கிய ராஜ்சியம் மற்றும் சோவியத் யூனியன் ஒப்பமிட்டன.


1992 - யாழ்.குடாவில் 2000 குழந்தைகள் போசாக்கின்றி இறக்கும் அபாயம். கடந்த ஒரு மாதத்தில் 4 பேர் சாவு என அபாய எச்சரிக்கை.

- கொழும்பில் தங்கியுள்ள வெளியார் மீண்டும் பதியக் கோரிக்கை.

2003 - இந்தோனேஷியாவில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் தலைநகர் ஜகார்த்தாவில் மரியட் விடுதிக்கு வெளியே 12 பேர் உயிரிழக்க 150 பேர் வரை காயமடைந்தனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



சு.பிரவீனா,
தரம் - 2 F,
சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரையின் புனிதம் சிதைக்கப்படுவது நீதியானதா?

கூட்டு எதிரணியினரின் அரசுக்கு எதிரான பாத யாத்திரை எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பதை மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தற்போதைய அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பதே தமது பிரதான நோக்கமென பாதயாத்திரையை ஒழுங்கு செய்தவர்கள் கூறிக்கொள்கின்றனர். ஆனால், இதற்கான வலுவான காரணங்களை அவர்களால் கூறமுடியவில்லை. மேலும், ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கியிருக்கும் நாமல் ராஜபக்ச, விமல் வீரவின்ச ஆகியோர் பாதயாத்திரையின்போது முன்னிலை வகித்ததை மக்கள் ஏற்றுக்கொள்வார்களென எதிர்பார்க்க முடியாது. குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தப் பாதயாத்திரையை ஒழுங்க செய்திருக்கலாமென்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

முன்னரும் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கண்டி நோக்கியதான பாதயாத்திரை ஒன்றை நடத்தியிருந்தார். இந்தப் பாதயாத்திரை முழுக்க முழுக்க இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிடக்கூடாது என்பதே இதன் பிரதான நோக்கமாகவும் இருந்தது. இறுதியில் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் இடைப் பிரச்சினை நீண்டு செல்வதற்கு வழியேற்பட்டது.

வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டபோது சுதேசிகள் உப்பை அள்ளி எடுப்பதற்கு வரி விதித்தனர். இதை எதிர்த்து தேசபிதா காந்தி அடிகள் மிகப் பெரிய பாதயாத்திரையை நடத்திக் காட்டினார். தண்டி யாத்திரையென இதற்குப் பெயரும் சூட்டப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் காந்தி தலைமையில் அணி திரண்டு சென்று, தண்டிக் கடற்கரையில் உப்பை அள்ளினர். மக்களின் எழுச்சியைத் தடுப்பதற்கு வெள்ளையர்களால் முடிய வில்லை. இதேபோன்றுதான் தமிழ் நாட்டில் இரா ஜாஜியின் தலைமையில் பாதயாத்திரையாகச் சென்ற மக்கள் வேதாரணியம் கடற்கரையில் உப்பை அள்ளி எடுத்தனர். இந்தப் பாதயாத்திரைகளில் ஒரு தூயநோக்கம் புதையுண்டு போய்க் காணப்பட்டது. இதனால் மக்களின் பேராதரவு அதிகமாகவே கிடைத்தது. ஆனால், ஜே.ஆர்.தலைமையிலான பாதயாத்திரையும்சரி, மகிந்த தலைமையிலான பாதயாத்திரையும்சரி, நல்ல நோக்கங்களைப் பிரதிபலிப்பனவாகத் தெரியவில்லை. தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபடவேண்டுமானால், தற்போதைய அரசைக் கவிழ்த்து விட்டு மகிந்த தலைமையில் அரசொன்றை அமைப்பதே ஒரே வழியென கூட்டு எதிரணியினர் நம்பு வது தெளிவாகத் தெரிகின்றது. இத்தகையவர்களால் நாடு எதிர்கொண்டுள்ள அவலங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று தாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு எவர் காரணம் என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாதயாத்திரை என்பது வெறுமனே சிலர் ஒன்றுகூடி நடந்து செல்வது அல்ல. அதிலும் ஒரு புனிதம் கலந்திருக்கின்றது. ஆண்டுதோறும் தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரையாகச் செல்கின்ற அடியார்களையும் நாம் காண்கிறோம். ஒரு தவம் போன்று இதை அவர்கள் கருதிச் செயற்படுகின்றனர். பாதயாத்திரிகள் பக்தி ஒன்றையே தமது மனதில் இருத்திச் செயற்படுகின்றனர்.

ஆனால், குரோதமும், காழ்ப்புணர்வும் சுயநலமும், நிறைந்த கூட்டு எதிரணியினர் இந்தப் புனிதமான பாதயாத்திரையைக் கொச்சைப்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றமை ஏற்கத்தக்கதல்ல. மக்களின் ஆதரவும் இதற்குக் கிடைத்து விடப் போவதில்லை. அவர்களின் நோக்கமும் நிறைவேறப் போவதில்லை.






# அம்பிகையின் அருட்கடாட்சம் பெருக்கும் ஆடிப்பூரத் திருநாள்

காரை. எம்.பி.அருளானந்தன்.

பன்னிரண்டு மாதங்களிலும் ஆடி மாதத்தில் இந்துக்கள் அனுஷ்டிக்கும் விரதங்களும், வழிபாடுகளும் பல. ஆண்டொன்றை உத்தராயணம், தட்சிணாயணம் என இருபிரிவாக வகுத்துள்ளனர்.

தட்சிணாயணம் என்பது இந்த ஆடி மாதத்திலிருந்து ஆரம்பமாகின்றது. ஆடிப்பிறப்பே அதன் ஆரம்பம். ஆடிப்பிறப்பைத் தொடர்ந்து இந்த மாதத்திலேயே தான் இந்துக்கள் தமது மூதாதையர்களுக்கு நிறைவேற்றிவருகின்ற பிதிர்க்கடனை விதந்துரைக்கும். ஆடி அமாவாசை, அம்பாள் வழிபாட்டுக்குரிய ஆடிச்செவ்வாய், ஆடிவெள்ளி, முருகனுக்குரிய ஆடிக்கிருத்திகை போன்ற விரத வழிபாட்டுத் தினங்கள் இந்த ஆடி மாதத்திலேயே பெருகி வருவதைக் காண்கிறோம்.

பாரத தேசத்தில் ஆடி பதினெட்டாம் நாளை ஆடிப்பெருக்கு எனக்கொண்டாடி வருகின்றனர். தமிழ்நாட்டில் இந்த மாதத்திலேயே ஒரு விசேடம் காவேரி நதியில் வெள்ளப் பிரவாகம் இருக்கும். அன்னை காவேரியின் விருப்புக்காகத் தேங்காய்ப்பால் காய்ச்சுவது வழக்கம். காவேரி அம்மனுக்கு மசக்கை என்று பலவித சித்திரான்னங்களைச் செய்து நிவேதனம் செய்வார்கள்.

காவேரிக் கரையிலுள்ள பெண்கள் பலவித சித்திரான்னங்களை எடுத்துக் கொண்டுபோய், காவேரி ஆற்றில் கரையில் குடும்பத்தோடும், நண்பரோடும் உண்டு மகிழ்வார்கள்.

காவேரி அம்மனுக்கு காதோலை, கருகமணி வாங்கி ஆற்றில் போடுவது வழக்கம். இந்தத் திருநாளில் குழந்தைகள் சப்பறம் கட்டி ஆற்றின் கரையில் குதூகலமாகக் களித்து மகிழ்வார்கள்.

அதுமட்டுமல்ல ஆலயங்களில் அம்பாள் தவம் செய்வதாக ஐதீகம். அம்பாளுக்கு வளைகாப்பு என்றும் கொண்டாடுவார்கள்.

ஆடிப்பூரத்தை அம்பாளின் வழிபாட்டுக்குரிய நாளாக சக்தி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்ற வழமை உண்டு. அம்பாள் பூப்பெய்திய திருநாளாகவும், ஆலயங்கள் தோறும் பூராகர்மம் மெனப்போற்றி பூப்புமங்கல நீராட்டு வைபவமும் நடத்தப்படுகின்றது.

> ஆடி அமாவாசை அம்பாள் வழிபாட்டுக்குரிய ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி முருகனுக்குரிய ஆடிக்கிருத்திகை போன்ற விரத வழிபாட்டுத் தினங்கள்.

சிவபெருமானுக்கு திருவாதிரை போற்றப்படுவது போல, விஷ்ணுவுக்கு திருவோணம் போற்றப்படுகிறது. அதே போல் முருகப் பெருமானுக்கு விசாக நட்சத்திரம்போல, அம்பிகைக்கு சிறப்பாக பூரம் போற்றப்படுகின்றது, மாதந்தோறும் பூர நட்சத்திரம் வருவதாயினும் ஆடிப்பூரமே சிறந்த நன்நாளாகப் போற்றப்படுகின்றது. எமது முன்னோர் தமது விவசாய நிலங்களை ஆடி உழவு தேடி உழுவீர். 'ஆடி முனை தேடி நடு' என இந்த மாதத்தின் சிறப்பு பேசப்படுகின்றது. எனவே இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக விளங்கும் இந் நன்நாளைப் போற்றி வணங்கி வழிபட்டு வையத்தில் வாழ் வாங்கு வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

**சிம்ம ராசி**



பிளான் பண்ணினா
"சிவாஜி" ரஜினி மாதிரி இருக்கலாம்.

**கன்னி ராசி**



எது ஆரம்பிச்சாலும் பொங்கல் சாப்பிட்ட மாதிரி
மந்தமாத்தான் இருக்கும்! மனசைத்
தளரவிடாம வேலையைப் பாருங்க.

**துலாம் ராசி**




என்னதான் முட்டு கொடுத்தாலும்,
உடையிற பைப் உடையத்தான் செய்யும்.

**விருச்சிக ராசி**



ஆடி கார்ல வாயப் பொளந்துகிட்டு போனா
லும் ஆச்சரியமில்லை தான்.

## அஜித் பட நாயகியாக தமிழில் அறிமுகமாகிறார் அக்ரா ஹாசன்



வீரம், வேதாளம் படங்களுக்குப் பிறகு இயக்குநர் சிவாவுடன் இணைந்து மற்றொரு படத்தில் பணியாற்றுகிறார் அஜித். இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

'தல 57' என்று தற்போதைக்குக் குறிப்பிடப்படும் இந்தப் படத்தில் அக்ராஹாசன் நடிக்கிறார். ஏற்கனவே பொலிவூட்டில் அறிமுகமாகியுள்ள அக்ரா, தமிழில் அறிமுகமாகும் படம் இது. இதுதவிர, சபாஷ் நாயுடு படத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

இந்தப் படத்தில் காஜல் அகர்வாலும் மற்றொரு கதாநாயகியாக நடிக்கிறார். இண்டர்போல் அதிகாரியாக அஜித் நடிக்கும் இந்தப் படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பு ஐரோப்பாவின் வெவ்வேறு நாடுகளில் நடைபெறுகிறது. 2017 ஏப்ரல் மாதத்தில் படம் வெளிவரவுள்ளது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | | 4 | | | 9 |
| | | | | 3 | | 8 | | |
| 9 | | | | | | | 6 | |
| | | | 6 | | | | | 2 |
| | 8 | | | 7 | | | 3 | |
| 3 | | | | | 5 | | | |
| | 9 | | | | | | | 1 |
| | | 1 | | 9 | | | | |
| 4 | | | 3 | | | 2 | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 1 | 6 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |
| 9 | 8 | 7 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 |
| 1 | 2 | 5 | 7 | 9 | 6 | 3 | 4 | 8 |
| 6 | 3 | 9 | 1 | 4 | 8 | 5 | 2 | 7 |
| 8 | 7 | 4 | 2 | 5 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 6 | 2 | 4 | 7 | 1 | 8 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 8 | 6 | 9 | 2 | 7 | 3 |
| 7 | 9 | 8 | 5 | 3 | 2 | 4 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சிபெற, கடினமாக உழைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** குடும்பப் பிரச்சினை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான பணவரவு கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. எதிர்பார்த்த செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மிதுனம்:** பேச்சிலும், செயலிலும் உறுதி நிறைந்திருக்கும். சிலரது விமர்சனத்தை பொருட்படுத்தமாட்டீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள வளர்ச்சியால் இலாபம் உயரும். குடும்ப ஒற்றுமை சிறக்கும்.

**கடகம்:** குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் படிப்படியாக உயரும். வெளியூர்ப் பயணத்தில், திடீர் மாற்றம் உண்டாகும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**சிங்கம்:** உங்களின் சிந்தனையில் புதுமை நிறைந்திருக்கும். உறவினர் மூலம் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த இடையூறு விலகும். வருமானம் திருப்தியளிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**கன்னி:** எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்கலாம். இலாபம் சுமாராக இருக்கும். இயந்திரப் பணியாளர்கள், விழிப்புடன் செயலாற்றவும்.

**துலாம்:** உங்களின் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி, குழந்தைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர் வியக்கும் விதத்தில் வளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். குடும்பத் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**தனுசு:** முக்கிய பணிகளில் கூடுதல் கவனம் அவசியம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு, வீட்டுச் செலவு அதிகரிக்கும். ஆடம்பர விடயத்தில் ஆர்வம் கொள்ளவேண்டாம்.

**மகரம்:** நேர்மை குணத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். இலாபம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும்.

**கும்பம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மீனம்:** முக்கிய செயல்களில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்து, இலாபம் காண்பீர்கள். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**கணவன்:** நீ கல்யாணத்துக்கு முன்னாடி யாரையாவது லவ் பண்ணி இருக்கியா...?
**மனைவி:** (அமைதி)
**கணவன்:** அய்யோ தங்கம்.. காயப்படுத்திட்டனா..? சாரி டி குட்டிமா.
**மனைவி:** என்னங்க, எண்ணிட்டு இருக்கும்போது குறுக்க பேசா தீங்க... இப்ப பாருங்க திரும்ப எண்ணனும்...
**கணவர் :** ??????





smt.laks @varapappu

மன்னிக்க மன்னிக்க நாம்
கம்பீரமடைகிறோம். மனதால்
அதிகபலம் கொள்கிறோம்.
விட்டுக் கொடுக்க
கொடுக்கத்தான்
ஒவ்வொருவரும் வளர்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண்களுக்கான நாகரிக சப்பாத்துகள் அறிமுகமாகியுள்ளன. ஈயக் கூடிய துணியில் வடிவமைக்கப்பட்ட இவை, அன்றாட பாவனைக்கு உகந்ததாகும். இவற்றின் விலை 1500 ரூபாவில் இருந்து 2800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய கடலுணவு
## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 500 | – | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 600 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 200 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | – | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | – | 350 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 80 | – | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 350 | – | – |

# எள்ளு முறுக்கு

**தேவையான பொருள்கள்**

பச்சரிசி மா –1 கப்
பொட்டுக்கடலை மா –1/4 கப்
கடலை மா – 1/4 கப்
எள் – 1 மேசைக்கரண்டி
மிளகாய்த் தூள் – 1 தேக்கரண்டி
பெருங்காயத்தூள் – 1 தேக்கரண்டி
உப்பு, எண்ணெய் – தேவையானது

**செய்முறை**

சட்டியில் அரை கப் தண்ணீர் விட்டு அதனுடன் மிளகாய்த் தூள், பெருங்காய்த் தூள், தேவையான உப்பு சேர்த்து நன்கு கொதிக் கவைக் கவும்.


பின்னர் அதனுடன் கடலை மா, பொட்டுக்கடலை மா, எள் சேர்த்து கிளறவும். கிளறிய மா, முறுக்கு மாப் பதத்தில் இருக்கவேண்டும்.

வேண்டுமென்றால் தண்ணீர் சிறிதளவு சேர்த்துக் கொள்ளலாம்.

சட்டியில் எண்ணெய் வைத்து காய்ந்த பின் தேன்குழல் படியில் முறுக்கு வில்லையைப் போட்டு, சிறிது மாவை அதில் சேர்த்து எண்ணையில் பிழியவும்.

இரண்டு பக்கமும் நன்றாக வெந்ததும் எடுக்கவும். எள்ளு முறுக்குத் தயார். மாலை நேரங்களில் சிற்றுண்டியாக பரிமாறலாம்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 50 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 100 | 100 | 140 | 100 | 60–70 | 80 | 90 | 80 |
| கரட் | 150 | 160 | 240 | 100 | 140–160 | 180 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80–100 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 120 | 180 | 200 | 250 | 50 | 140 | 200 | 100 |
| பாகல் | 150 | 220 | 325–400 | 300 | 180–200 | 160 | 240 | 200 |
| கருணைக்கிழங்கு | 180 | 120 | 200 | 130 | 80–120 | – | 75 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 100 | 80 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 50–100 | 70 | 60 | 100 | 90 | 70 |
| பூசணி | 80 | 80 | 120 | 80 | 100 | 100 | 70 | 100 |
| தக்காளி | 100 | 100 | 200 | 100 | 80 | 150 | 120 | 70 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 | 80–100 | 80 | 70 | 50 |
| கீரை | 20 | 20 | 40 | 25 | 20–30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 10–15 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 400 | 600 | 300 | 320 | 600 | 400 | 400 |
| புடோல் | 70 | 80 | 80 | 50 | 60 | 80 | 70 | 60 |
| கோவா | 140 | 40 | 140 | 150 | 120 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 60 | 80 | 40 | 50–60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 130 | 200–220 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 120–140 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 | 90–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 160 | 100 | 110–120 | 200 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 320 | 200 | 220 | 200 | 200 | 170 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 150 | 120 | 150 | 100–120 | 400 | 200 | 120 |

# நாளை

ஆடி-22
சனிக்கிழமை
-06.08.2016
திதி: சதுர்த்தி
பி.இ.04.46 வரை
நட்சத்திரம்: உத்தரம்
முழுவதும்
ராகுகாலம்:
09.04-10.34 வரை
சுபநேரம்:
03.04-04.34 வரை
நாக சதுர்த்தி விரதம்

## செல்வம் கொழிக்க வீட்டில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டியவைகள்

வீட்டில் புறா கூடு இருந்தால், அது வீட்டின் வறுமையை அதிகரித்து, உறுதியற்ற நிலையை ஏற்படுத்தும். எனவே உங்கள் வீட்டில் பணம் சேர வேண்டுமானால், உங்கள் வீட்டினுள் இருக்கும் புறா கூட்டினை வெளியேற்றுங்கள்.

வீட்டினுள் தேன் கூடு இருப்பது ஆபத்தானது மட்டுமன்றி, வீட்டில் வறுமை மற்றும் துரதிர்ஷ்டத்தை கொடுக்கும். உங்கள் வீட்டில் தேன் இருப்பின், உடனே அதனை வெளியேற்றுங்கள். வீட்டில் சிலந்தி வலை இருப்பது என்பது வாழ்வில் துரதிர்ஷ்ட வசமான சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியாகும். எனவே வீட்டில் சிலந்தி வலையைக் கண்டால், உடனே அதை சுத்தம் செய்துவிடுங்கள்.

வாஸ்து சாஸ்திரப் படி, உடைந்த கண்ணாடிகளை வீட்டில் வைத்திருப்பது என்பது வீட்டில் வறுமையை அதிகரித்து எதிர்மறை ஆற்றல்களை ஈர்ப்பதாக கருதப்படுகிறது. ஆகவே உங்கள் வீட்டில் ஏதேனும் உடைந்த கண்ணாடி இருப்பின், அதை பத்திரப்படுத்தாமல் உடனே தூக்கி எறிந்துவிடுங்கள்.

வெளவால், உடல்நல பிரச்சினை, மோசமான சம்பவங்கள், வறுமை அல்லது இறப்பைக் குறிப்பதாக கருதப்படும் ஒன்று. இத்தகைய வெளவால் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டினுள் நுழைவது கெட்ட சகுணம். எனவே மாலை நேரத்திற்கு பின் வீட்டின் ஜன்னல் கதவுகளை அடைத்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனசக்தி இன்ஷூரன்ஸின் புலமைப் பரிசில் வலுவூட்டல்



ஜனசக்தி இன்ஷூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனம், தேசத்தில் அறிவு என்ற ஒளிவிளக்கை ஏற்றுவதில் தொடர்ச்சியாகக் காண்பித்து வருகின்ற அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டின் ஒரு பகுதியாகத் தனது வருடாந்த தரம் 5 புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் அறிவித்துள்ளது.
2016 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நாடெங்கிலும் பிரதான நகரங்களில் இலவசக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளது.
தொடர்ந்து 2 ஆவது ஆண்டாகவும் இந்தப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன், இந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச தொடர் கருத்தரங்குகள் மூலமாகத் தேவையான அறிவு, உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளது.
கண்டி மற்றும் பண்டாரவளையில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் ஏற்கனவே இடம்பெற்று, நிறைவடைந்துள்ளதுடன், இதில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.
மேலும், இந்தக் கருத்தரங்குகளில் பங்குபற்றி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற மாணவர்களுக்கு அவர்களின் மிகச் சிறந்த பெறுபேறுகளுக்காகவும், வளமான எதிர்காலத்துக்கு அவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்தும் முன்னெடுக்கத் தேவையான உதவிகளை வழங்கும் வகையிலும், புலமைப் பரிசில்களையும் ஜனசக்தி நிறுவனம் வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

**வணிகம்**

தொடர்ந்தும் 2 ஆவது ஆண்டாகவும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களைக் கல்வியின் மூலமாக வலுவூட்டுவதில் அங்கம் வகிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். சிறுவர்களே எமது எதிர்காலச் சிற்பிகள், பொறுப்புணர்வுள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், எமது தேசத்தில் கல்வியறிவுமிக்க மக்களுடன், வளமான எதிர்காலத்தை உறுதிசெய்வதில் பங்கு வகிக்கவேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளதென நாம் நம்புகின்றோம் என்று ஜனசக்தி இன்ஷூரன்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜுட் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (தி)

# 25வருட நிறைவைக் கொண்டாடும் சொப்ட் லொஜிக் குடும்பம்

இலங்கையின் வர்த்தக சக்தி மையமான சொப்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம், கடந்த ஜூலையில் அதன் 25 வருடச் செயற்பாடுகளை நிறைவு செய்கின்றபோது நாட்டின் மிகவும் சக்திமிக்க ஒரு வர்த்தக சாம்ராச்சியமாகத் தன்னை நிலை நிறுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
துணிச்சலான தூரநோக்கு, வாய்ப்புக்களைப் பயன்படுத்தக் காத்திருக்கின்றமை, மதிப்பீடு செய்யப்பட்ட இடர் களைச் சமாளித்தல் என்பனவற்றின் மூலம் சொப்ட் லொஜிக் குடும்பம் உள்ளூர்ப் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டு வரும் ஆறு பிரிவுகளில் தனது நிலையை ஸ்திரமாகப் பதித்துள்ளது எனக் கூறப்பட்டது.
சுகாதாரப் பராமரிப்புப் பிரிவிலும் சில் லறை வர்த்தகத்திலும் அது அசைக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது. தகவல் தொடர்பு தொழில்நுட்பம், நிதிச் சேவைகள், வாகனங்கள் மற்றும் உல்லாசத் துறை என்பன வற்றிலும் தனக்கெனத் தனியானதோர் இடத்தைத் தக்க வைத்துள்ளதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.
கடந்த இரண்டரை தசாப்த கால வளர்ச்சியைத் திரும்பிப் பார்க்கின்றபோது துரித வளர்ச்சிப் போக்கும் ஏனைய வர்த்தகங்களின் ஆக்ரோசமான கையேற்புக்களுமே இதற்குக் காரணம் என்று சொப்ட் லொஜிக் ஸ்தாபகரும் தலைவருமான அசோக் பதிரகே தெரிவித்துள்ளார்.
ஆஸிரி ஆஸ்பத்திரி குடும்பத்தை அது கையேற்றமை, ஒடெல் நிறுவனத்தைக் கையேற்றமை என்பன இதில் குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த நிதி ஆண்டில் மட்டும் விற்பனைகள் 46 வீத வளர்ச்சியைப் பதிவு செய்து 39 பில்லியனில் இருந்து 57 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. எமது திட்டமிடல் படி எல்லாமே நடந்தால் அடுத்த ஐந்தாண்டில் எமது நிறுவனத்தின் அளவு இரு மடங்காக அதிகரிக்கும் என்று அசோக் பதிரகே மேலும் கூறினார்.
எமது வர்த்தகத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லக் கூடிய உறுதியான தளத்தில் நாம் இப்போது இருக்கின்றோம். கடந்த 25 வருட காலத்தை விட இது மிகவும் இலகுவானதாக இருக்கும். காரணம் நாம் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு இருக்கின்றோம். எம்முடையதும் எமது மக்களினதும் தூரநோக்கு காரணமாக நாம் இந்த இலக்கை அடைந்துள்ளோம். மிகக் கடினமான பணிகளை நாம் செய்து முடித்துள்ளோம். அது வெறும் கடின உழைப்பு மட்டும் அல்ல. சரியான தகுதியான நபர்கள் அதற்குரிய இடங்களில் வைக் கப்பட்டுள்ளமை தான் சொப்ட் லொஜிக்கின் வெற்றிக்கு முக்கிய காரணம். சில நேரங்களில் துணிச் சலான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.
அது வர்த்தக இலக்குகளை முன்னெடுத்துச் செல்ல அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபர்கள் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையில் இருந்து தான் உருவாகின்றது. இங்கிருந்து தான் அடுத்த கட்டத்துக்கும் நாம் செல்ல முடியும் என்று அவர் மேலும் கூறினார்.
எதிர்காலத்தில் உடனடியான இலாபமீட்டலில் நாம் முக்கிய கவனம் செலுத்தவுள்ளோம். அடுத்த கட்ட வளர்ச்சியில் இதில் கூடிய கவனம் செலுத்தப்படும். மற்றவர்கள் கண்டு கொள்ளாத வாய்ப்புக்களுக்காக சொப்ட் லொஜிக் தொடர்ந்து காத்திருக்கும். அதன் கடந்த கால வெற்றிகளுக்கான மூல மந்திரமாக இதுவே அமைந்திருந்தது என்று பதிரகே குறிப்பிட்டார். (தி)

## பங்குச் சந்தை தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE — 4/8/2016 — www.cse.lk

| சுட்டெண் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -33.33 | 6,478.25 | 6,511.58 |
| S&P SL20 | -23.10 | 3,511.02 | 3,534.12 |
| வியாபாரப்புரள்வு | | 504,730,048 | 1,410,032,128 |
| உள்நாடு:- கொள்வனவு | | 401,810,112 | 922,875,264 |
| விற்பனை | | 436,369,536 | 946,980,288 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 102,919,936 | 487,156,832 |
| விற்பனை | | 68,360,496 | 463,051,808 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 145 | 383,656 | 55,618,483 |
| கொழும்பு போர்ட் லாண்ட் | CFLB.N | 24 | 2,113,830 | 50,735,311 |
| டிஸ்டிலரிஸ் | DIST.N | 268 | 165,741 | 44,758,504 |
| ரெக்ஸ்போட் பேர்ஸி | TJL.N | 39.1 | 699,000 | 27,284,927 |
| ஹெய்லஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 91 | 251,137 | 22,686,673 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 80 | 279,424 | 22,464,202 |
| அலுமக்ஸ் | ALUM.N | 18.9 | 1,179,898 | 22,411,319 |
| அ'ஸ்டர் | AGST.N | 6.7 | 2,365,301 | 15,032,115 |
| செவ்ரோன் லூப்ரிக்கன் | LLUB.N | 163.5 | 71,535 | 11,665,616 |
| டோக்கியோ சீமெண்ட் | TKYO.X | 42.5 | 272,544 | 11,571,333 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
ஈ பி. கிரேஸி & கம்பனி - பங்கு ஒன்றிற்கு Rs. 30.00
களனி டயர் (TYRE) - பங்கு ஒன்றிற்கு Rs. 2.50
ஏசில் கேபில் (ACL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50
செவ்ரோன் லூப்ரிக்கன் (LLUB) - பங்கு ஒன்றிற்கு Rs. 3.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 294 |
| பரிமாற்றத்தில் | 212 |
| விலை உழைப்பு | 13.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - யாழ் கிளை 147-2/3, K.K.S Road Jaffna - 212221455

## நுட்பம்




### 2 ஆயிரம் பணியாளர்களை நிறுத்துகிறது மைக்ரோசொப்ட்

கணினி உலகின் ஜாம்பவானாக வலம் வரும் மைக்ரோசொப்ட் நிறுவனம் உலகமெங்கும் பல ஆயிரக்கணக்கான பணியாளர்களைக் கொண்டு இயங்குகின்றது. தற்போது சுமார் 2 ஆயிரத்து 850 பணியாளர்கள் இடைநிறுத்தம் செய்யப் படவுள்ளனர் என்று அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.
நிறுவனத்தை மீள் கட்டமைப்புக்கு உட்படுத்தும் நோக்கிலேயே இந்த அதிரடி செயற்பாட்டில் மைக்ரோசொப்ட் நிறுவனம் இறங்கியுள்ளது என்று தகவல்கள் வெளியாகின.
ஒரே வருடத்தில் இரண்டாவது தடவை பணியாளர்களைக் குறைக்கும் நடவடிக்கையில் இந்த நிறுவனம் இறங்கியுள்ளது. கடந்த மே மாதத்தில் ஆயிரத்து 850 பணியாளர்களை நீக்கியது.
கடந்த வருடம் தனது கைபேசி உற்பத்திப் பகுதியில் உலகெங்கிலும் பணி புரிந்த 7 ஆயிரம் பணியாளர்களை இடைநிறுத்தியது.
அதேவேளை சுமார் 1 பில்லியன் சாதனங்களில் விண்டோஸ் 10 இயங்குதளத்தைப் பயன்படுத்த வைத்து தனது புதிய இலக்கை அடையும் நோக்கிலும் எதிர்வரும் வருடங்களில் செயற்பட மைக்ரோசொப்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

### இன்ஸ்டாகிராமின் புதிய வசதி

பல மில்லியன் கணக்கான பயனர்களைக் கொண்டுள்ள இன்ஸ்டாகிராம், தனது பயனர்களுக்கு அதிரடி வசதியொன்றை வழங்கவுள்ளது.
இந்தத் தளத்தில் காணொலிகள், புகைப் படங்களைப் பகிர்ந்து மகிழும் வசதி தரப் பட்டுள்ளதுடன், அவற்றுக்குக் கருத்துப் பதிவு செய்யும் வசதியும் சேர்த்துத் தரப்பட்டுள்ளது.
எனினும் ஒரு முறை ஏதும் தவறாகக் கருத்தைப் பதிவு செய்தால் அதனை நீக்கலாமே தவிர மாற்றம் செய்ய முடியாது. இது பயனர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக இருந்து வந்தது.
இதனைக் கருத்தில் கொண்ட இன்ஸ்டாகிராம் நிறுவனம் தற்போது பயனர்கள் தமது கணக்கினூடாக மேற்கொள்ளும் கருத்துக்களை மாற்றம் செய்யும் வசதியை புதிதாக அறிமுகம் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே மீட்கப்பட்ட தடயப் பொருள்கள் நீதிமன்ற உத்தரவுப்படி பகுப்பாய்வுத் திணைக் களத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அவை தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி மன்னார் நீதிவான் மன்றத்தில் முன்வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாந்தை பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மர்மக் கிணற்றை தோண்டும் பணிகள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன. அதற்குள் இருந்து அகழப் பட்ட மண் தண்ணீர் ஊற்றி அதனுள் ஏதாவது தடயங்கள் உள்ளனவா என்ற ஆய்வு 3 நாள்களும் உடனுக்குடன் மேற் கொள்ளப்பட்டன. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டே 3 நாள் களும் எலும்புத்துண்டு உள் ளிட்ட தடயப் பொருள்கள் மீட் கப்பட்டன.

அவ்வாறு ஆய்வு செய்யப் பட்டபோதும் தவறி மண்ணுள் ஏதாவது தடயப்பொருள்கள் உள்ளனவா என்பது பற்றியே நேற்று ஆய்வு இடம்பெற்றது. எனினும் அதனுள் குறிப்பிடு மளவுக்கு எதுவும் தவறியி ருக்கவில்லை. நேற்று முற் பகல் 11.40 அளவில் மண் ணில் தடயப் பொருள்கள் உள் ளனவா என்ற ஆய்வு நிறை வடைந்தது.

மன்னார் நீதிமன்றத்தில் பி-741/2015 இலக்கத்தில் தாக்கல் செய்யப்பட வழக்கு விசாரணைகள் மன்னார் நீதி வான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணை கள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் நீதிவான் முன்னிலையில் மன்னார் மாவட்ட சட்ட வைத்திய அதி காரி தலைமையில் கிணற்றின் அகழ்வுப் பணிகள் 3 நாள்கள் மேற்கொள்ளப்பட்டன. அகழ்வு நடவ டிக் கைகளின் போது அழைக்கப்பட்ட 17 திணைக் களத்தின் அதிகாரிகள் சமுகமளித்திருந்தனர்.

(வ-4,56)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி பஞ்சாட்சரம்



பிறப்பு 06 . 05 . 1941

இறப்பு 03 . 08 . 2016

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி செல்வராணி பஞ்சாட்சரம் 03.08.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தையாச்செட்டியார் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - லட்சுமிப் பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ் சென்றவர்களான கந்தையா- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் சிறிகுமார் (லண்டன்), வசந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயராணி, பகிரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷோபனா, பாரதி, சதுர்சன், ஜனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், யோகராசா, தனலட்சுமி, காலஞ்சென்ற தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆறுமுகம் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் இல. 628/5, நாச்சிமார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

628/5, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.


(N/98)
(12,18)

தகவல்:
சிறிகுமார் (மகன்)
வசந்தி (மகள்)

**0766887322, 0213218574**

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சற்குணசிங்கம்



நவாலி தெற்கு, கலையரசு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சற்குணசிங்கம் கடந்த 02.08.2016 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கோமளேஸ்வரியின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, கனவாசினி, அன்ரேசன், சுதானந்தன், சற்குணானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அதிசய தாசன், அருமைநாயகம், கலைச்செல்வி, ராதிகா, சந்திரகலா ஆகியோரின் மாமனாரும், ஜோயல், சுவேஸ்ரிகா, கமீஸ், தோமஸ், அனிந்திரா, ஆரணி, தாரணி, சாம்யோசேப், கஜன், ஜனுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் நவாலி CACM சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

கலையரசி வீதி,
நவாலி தெற்கு.

(J/3507)
(11,18)

தகவல்:
திருமதி ஞானேஸ்வரி அதிசயதாசன்
(மகள்)

## மரண அறிவித்தல்



### கந்தையா பொன்னம்பலம்
### J.P (All island)

### திருமதி பொன்னம்பலம் பரமேஸ்வரி (கருணி)

11ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், 119/4, முன்வீதி, பலாலி றோட், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம், திருமதி பொன்னம்பலம் பரமேஸ்வரி (கருணி) ஆகிய இருவரும் 03.08.2016 புதன் கிழமை இறைவனடி எய்திவிட்டார்கள்.

அன்னார்கள் கந்தையர - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அன்பு மருமகளும், மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற நாகம்மா - சின்னத்துரை தம்பதிகளின் அன்பு மகளும், அன்பு மருமக னும், இலகநாதன், காலஞ்சென்ற திலகநாதன் மற்றும் லோக நாதன், கமலாம்பிகை, பத்மாவதி, பரமேஸ்வரநாதன் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், மைத்துனரும், மைத்துனியும், தனலெட்சுமி, வரதராசன், ஸ்ரீஸ்கந்தராசா, திருக்கேதீஸ்வரன், ஜெயலட்சுமி, வாகீசன், பாலேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பெற்றோரும், சிவானந்தன், விஜயமலர், பரமேஸ்வரி, கலைச்செல்வி, ஜெயரூபன், கோமளா, நளாயினி ஆகியோ ரின் மாமா, மாமியும், மகேந்திரலெட்சுமி, மகேஸ்வரி, காலஞ் சென்றவர்களான செல்வராணி, பாலசுப்பிரமணியம் மற்றும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், மைத்துனியும், சகலனும், சகலியும், லக்சிகன், லவுசிகா, சுவேதா, சௌமியா, சர்னியா, சறோன், சயோன், நிவேதகன், நிவேதா, நிருசியா, சாரூன், விதுர்சன், வர்சன், பவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் பேர்த்தியும் ஆவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் 07.08.2016 ஞாயிற் றுக்கிழமை காலை 8 மணியளவில் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

119/4, முன்வீதி,
பலாலி றோட்,
திருநெல்வேலி.

(J/3501)
(11,18)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர, சகோதரிகள்.

**021 222 7353**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

கொழும்பில் அமைந்துள்ள Tourist Hotel ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

- Receptionist (Male/ Female)
- Accountant
- Barman
- Kitchen Helpers
- Waiters/Stewards
- Drivers
- Night Duty Managers
- Kitchen Supervisor

தகுதியுள்ளவர்கள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்வதோடு நேரிலும் சமுகமளிக்கலாம் அத்துடன் தங்கள் விண்ணப்பங்களை மின் அஞ்சல் மூலமும் அனுப்பிவைக்கலாம்

No: 214/2 ,Messenger Street, Colombo-12
077 085 6058, 077 932 8895
E.mail: brighten@eureka.lk

**விற்பனைக்குண்டு**

**மோட்டார் சைக்கிள்கள்**

1. Hero Glamour - NPBCQ-XXXX
2. Bajaj Pulsar 135 - WPBAG-XXXX
3. Bajaj Pulsar 150AS - NPBDF-XXXX
4. Bajaj Pulsar 150 - NPBBZ-XXXX
5. Hero Passion Pro - NPBCE - XXXX

தொடர்புகளுக்கு - மேனகாந் - 077 0608074, 077 3644409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
NO.233, Stanly Road, Jaffna.
T.P ; 021 2219997, 021 222 1898

## சர்வதேச

திகதி ஆரம்பித்தது. செயலணியின் முதல் அமர்வு யாழ். வேலணையில் இடம்பெற்றது. தற்போது வடக்கில் அமர்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தச் செயலணியிடம் மக்கள் எவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர் என்பது தொடர்பில் செயலணியின் செயலாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்ததாவது:

இதுவரை நாம் வடக்கு மக்களிடம் போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் வினவிய கருத்துக்களின் அடிப்படையில் பெருவாரியாக, முற்று முழுதாக ஒரு பன்னாட்டுப் பொறிமுறையிலான விசாரணையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை வழங்கும் என்ற கருத்து வலுவாக உள்ளது. உள்ளக விசாரணை நம்பகத் தன்மையற்றது என்றும், உள்ளகப் பொறிமுறையில் தீர்வை எதிர்பார்க்க முடியாது என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பதிலும் பன்னாட்டுப் பங்களிப்பே வேண்டும் என்றும் வடக்கு மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

விசாரணையில் வழங்கப்படும் சாட்சியங்களின் நம்பகத் தன்மை பேணப்படவேண்டும். அதற்கு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம்நீக்கப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் வடக்கு மக்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றனர் - என்றார்.

போர்க்குற்ற விசாரணையை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற்போனோர் பணியகத்தை எவ்வாறு நிறுவது என்பது தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறியும் முகமாக மக்கள் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தார். இதன் தலைவராக சட்டத்தரணி மனோரி முத்துஹெட்டிகேவும், செயலாளராக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்தும் நியமிக்கப்பட்டனர். (வ-5)

## யாழ்.பல்கலை

தற்போதைய நிலவரம் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் தமிழ் , சிங்கள மாணவர்களை நேற்றைய தினம் தனது மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி, தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும், இயங்காதுள்ள பீடங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். இந்தச் சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் மற்றும் மாணவர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடரத் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு சிங்கள மாணவர்கள் ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது பதிலளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம், பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்றது போன்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் மீண்டும் எந்தவகையிலும் ஏற்படாத வகையில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு அப்பால் ஒரு தனியான பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையற்றவை. சிங்கள மாணவர்கள் மனப் பயம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் தற்போது இடம்பெறும் பீடங்களிலும் கணிசமான சிங்கள மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டுள்ளனர்.என்று தெரிவித்தார்.

மாணவர்களின் பாதுகாப்புக்கான முழுமையான பொறுப்பு அரசையே சாரும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதுதொடர்பாக கூடிய கரிசனையுடன் செயற்படுமாறு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தினுள் மாணவர்களின் பாதுகாப்புக்காக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (வ-4,101)

## ரயில்

கடவையைக் கடந்தபோது, ரயில் அவரை மோதிப் பந்தாடியது. அதனால் அவர் உடல் சிதறி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"அவரது மனைவிக்கும் காது கேட்கும் திறன் இல்லை. இதனால் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பிய மகள் சென்று தந்தை யார் என்று பொலிஸாருக்கு அழுதுகுளறியவாறு அடையாளம் காட்டினார்." என்று அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர். அந்த உயிரிழப்பு நேற்று அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

"குறித்த பகுதி பாடசாலை உள்ளிட்ட சன நடமாட்டம் அதிகமான இடம் என்பதனால் பாதுகாப்புக் கடவை அமைக்குமாறு கடந்த ஜனவரியிலிருந்து கோரிக்கை விடுத்துவந்தோம். அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்தோம். இன்னும் அது நடக்கவில்லை. அத்னால் இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடக்காது இருக்க ரயில் செல்லும்போது பாதுகாப்புக் கடவையாக கேற் போடப்பட்டிருக்கவேண்டும் என்று ஊரவர்கள் ஒன்றுசேர்ந்து தீர்மானித்து ரயிலை மறித்து தண்டவாளத்திலிருந்தவாறு போராட்டத்தில் ஈடுபடுகிறோம்." என மக்கள் தெரிவித்தனர்.

போராட்டம் காரணமாக யாழ்ப்பாணம் சென்ற ரயில் மேற்கொண்டு பயணம் செய்ய முடியாது நின்றுவிட்டது. சுன்னாகம் பொலிஸார் அங்கு சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

"குறித்த பகுதியில் கடவை அமைக்குமாறு தாம் அநுராதபுரத்திலுள்ள ரயில் திணைக்களபொறுப்பதிகாரிகளுடன் கதைக்கவுள்ளோம். சில நாள்களில் அவர்கள் கேற் அமைத்துவிடுவார்கள் என்று கூற முடியாது. ஓரிரு வாரங்களில் அதனை அமைக்குமாறு நாம் வலியுறுத்துவோம். அதுவரை சிவில் பாதுகாப்புக் குழுவினர், பொலிஸார் இணைந்து ரயில் செல்லும் நேரங்களில் குறித்த கடவைகளில் தற்காலிகமாக யாராவது ஒருவர் கடவையில் ஈடுபட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொலிஸார் கூறினர். அதனையடுத்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது. (வ-4,ரி5)

**கண்ணீர் அஞ்சலி**



கோண்டாவில் கிழக்கு,கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட
**த.இ.பாலசுந்தரம்**
அரச கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர் யாமினி எஞ்ஜினியர்ஸ், கோப்பாய் அரிமா கழக உறுப்பினர், ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை தலைவர், அகில இலங்கை சமாதான நீதிவான், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்ற ஆளுநர்சபை அங்கத்தவர், வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்க உபதலைவர், தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாண கிளை முன்னாள் தலைவர் அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒருங்கிணைப்பாளர்கள்,
வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கம்
கோண்டாவில்

05.08.2016
**இன்று மாலை** 5.30 மணி

Raajeshwary Hall
இராஜேஸ்வரி அறக்கொடை நிலையத்தினரால் ஆதரவற்றவர்களுக்கு அன்புக்கரம் கொடுக்கும் நோக்குடன் நடத்தப்படும்




திண்டுக்கல்
**ஐ.லியோனி**
குழுவினர் வழங்கும்

**"நகைச்சுவை பட்டிமன்றம்"**

இடம்: இராஜேஸ்வரி மண்டபம் (A/C)
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.
(தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் அருகில்)

222 3999

**நினைவஞ்சலி**

நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு: அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.
(சங்கீதம் 37:37)

தோற்றம் 05 08 1942
மறைவு 05 01 2016



**திருமதி. அமிர்தராணி குணரட்ணம்**
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை)

பிறப்பவர்கள் இறப்பது நிச்சயம்
நீயோ... இறந்தபின் வாழ்வது
நிச்சயம் என்ற நம்பிக்கையில்
வாழ்ந்த வாசனையை முகர்ந்து...
மீண்டும் சந்திக்க ஆவலாயிருக்கும்
உறவினர்கள்

A.சாம் குணரட்ணம் மற்றும் பிள்ளைகள்
A82, நந்துமகேவத்த, வீடமைப்புத்திட்டம், நுகேகொட.
தொ.பேசி: 0112829968

**கண்ணீர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **ந.அருணதர்சினி** அவர்களின் தாயாரான

**திருமதி பாக்கியலீலா நவரத்தினம்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம்.

பிரதேச செயலாளரும் பிரதேச செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் நலன்புரி சங்கம்,பிரதேச செயலகம் வேலணை.

**தாதிய உதவியாளர் தேவை**

றோயல் பற்சிகிச்சை நிலையத்துக்கு பெண் தாதிய உதவியாளர் தேவை.
வயதெல்லை: 20 - 30
நேர்முகத் தேர்வு: எதிர்வரும் 07.08.2016 ஞாயிறு 10.30 மணிக்கு றோயல் பற்சிகிச்சை நிலையத்தில் நடைபெறும்.
நேர்முகத் தேர்விற்கு சுயவிவரக் கோவையுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
(மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: றோயல் பற்சிகிச்சை நிலையம்
இல.454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 654 4731/ 021 561 7035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை நெல் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக 5

இந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கைக்காக யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு விதை நெல்லை விநியோகிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நான்கு மாதங்களில் விளைச் சலைப் பெறக்கூடிய பிஜி 406 இனத்தைச் சேர்ந்த விதை நெல் சங்கத்தால் வழங்கப்படுகின்றது. இந்தப் போகத்துக்கென மூவாயிரத்து 800 புசல் விதை நெல் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டது.

இந்த விதை நெல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தரமானவை இனங்காணப்பட்டன. தற் போது இந்த விதை நெல்லை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். விதை நெல் விவசாயிகளுக்கு கட்டுப்பாடு இன்றி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

(ற-17)

## சுகாதாரப்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பிக்கப்பட்டது. கொழும்பு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் பணிக்கப்பட்டது.

முன்னர் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் 150 கிணறுகளில் தண்ணீர் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் தற்போதைய நிலை தொடர்பில் ஆய்வு செய்ய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீதிமன்றிடம் நேற்று அனுமதி கோரினர். அதற்கு அனுமதி வழங்கிய நீதிமன்று 6 மாதங்களில் அது பற்றிய அறிக்கையைச் முன்வைக்குமாறு பணித்தது. இந்த வழக்கு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(வ-4)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா சோதிநாதன்



குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா சோதிநாதன் நேற்று (04.08.2016) வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-ஆச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜயரஞ்சினி(ஜனனி) மற்றும் தவனீசன்(ஈசன்-மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காதரமூர்த்தி (கனடா). இரத்தினாபதி (குமர கோட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா (குமரகோட்டம்). சூரியகுமார் (கனடா). ஜயாத்துரை (கம்பர்மலை). செல்வலக்ஷ்மி (கல்முனை). ரஞ்சிதம்(கொம்மந்தறை). ராஜசேகரம் (முத்தை யன்கட்டு). அருமைச்சந்திரன் (பருத்தித்துறை). பிறேமாவதி (கல்முனை). சுகந்தி(புதுளை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

குமரகோட்டம், 077 2246652
கோண்டாவில். 077 2227793

## மரண அறிவித்தல்

### சண்முகம் சிவசங்கரன்



புதுக்குடியிருப்பு மணல்குளத்தைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவசங்கரன் நேற்று (04.08.2016) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்- சண்முகவடிவு தம்பதிகளின் அன்பு மகனும் சந்தனச்செல்வியின் அன்புக் கணவரும் டிலானி.ஹரிஹரன். சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு.
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி தவமணி



யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடக்கு, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்.நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தவமணி 01.08.2016 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்புச் சகோதரியும், இரவீந்திரன் (கனடா), சுபேந்திரன் (ஜேர்மனி), உஷா (ஜேர்மனி), ஜெயந்திரன் (கனடா), யுகந்திரன் (ஜேர்மனி), வனஜா(இலங்கை), றஜீந்திரன் (கனடா), கிரிஜா (சுவிஸ்), அனுஜா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளினி, ஜெயந்தி, மனோராஜன், மரியா, நித்தியா, குணசேகரன், றபீனா, சிவகுமார், துஷ்யந்தன் (கணினி மென் பொருள் உதவியாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான அப்புத்துரை அன்னம்மா, வைரமுத்து இரத்தினம், குருநாதன் மற்றும் கனகரத்தினம், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - ராசமணி, மாசிலாமணி மற்றும் மார்க்கண்டு - அஸ்வத்தம்மா, கந்தசாமி - பாலசறோஜா, தங்கத்துரை - மல்லிகாதேவி ஆகியோரின் அருமை மைத்துனியும், ஷோபனா, றஜீவன், றயுலன், டிலுஜன், றொபின்ஷன், ஜனார்த்தனன், ஸ்வேதா, ஸ்ருதி, நிரோஷன், நிஜிர்ஷன், மிதுஷன், நிபிஷனா, யுலேக்கா, யாகுலன், மதுஷா, கெவின், றாமோன், சிமோனா, டிலுஷா, பிரீத்திஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/61, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு.
தகவல்: குடும்பத்தினர்.

021 221 1132

(J/3514)
(11.18)

# கண்ணீர் அஞ்சலி



எமது சம்மேளன முன்னாள் தலைவரும், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், வலி-தென்மேற்கு பிரதேச இளைஞர் கழகத்தின் அலோசகருமான

திரு. அ. ஜெபநேசன் அவர்களின் அன்புத் தந்தை

## அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி - தென்மேற்கு பிரதேச இளைஞர் சம்மேளனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குசல் மெண்டிஸ் கலக்கல் இலங்கை தற்காப்பு நிலை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளில் இலங்கை தன்னைக் காத்துக்கொள்ளக்கூடிய தொடக்கம் கண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் பந்திலேயே கருணாரத்ன ஆட்டமிழந்தார். கருணாரத்னவை வெளியேற்றிய ஸ்ராக் அடுத்த சில நிமிடங்களில் சில்வாவையும் பவிலியன் திருப்ப 9 ஓட்டங்களில் இலங்கை தனது ஆரம்ப வீரர்களை இழந்தது. களமிறங்கினார் குசல் மெண்டிஸ். மீண்டுமொரு அபார ஆட்டம் அரங்கேறியது. குசல் பெரேராவும் சிறப்பான பங்களிப்பை வழங்க இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. ஒரு ஓட்டத்தால் அரைச்சதத்தை தவறவிட்டார் குசல் பெரேரா. 86 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் குசல் மெண்டிஸ். மத்தியூஸ் விரைவான அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். ஐந்து ஓட்டங்களுடன் சந்திமல் ஏமாற்றினார். முடிவில் இலங்கை 281.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸிக்கும் ஆரம்பம் சறுக்கியது. ஓட்டமெதனையும் பெறாது போர்ண்ஸ் ஆட்டமிழந்தாலும், வோர்ணர் சிறிது அடித்தாடினார். வோர்ணரை வெளியேற்றினார் பெரேரா. நாள் முடிவில் ஆஸி 54-2 என்றுள்ளது. (ம)





# சொகைல் கானின் வேகத்தில் சுருண்டது இங்கிலாந்து அணி

இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின முதல் நாளில், இங்கிலாந்து முதல் இன்னிங்ஸுக்காக 297 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான், முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்பம் முதலே இங்கிலாந்தை அச்சுறுத்தினார் சொகைல் கான். 17 ஓட்டங்களுடன் கேல்ஸை வீழ்த்தி, இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் சொகைல் கான். அடுத்த சில நிமிடங்களில் ரூட்டும் ஆட்டமிழந்தார். குக், வின்ஸ் இருவரும் நிதானத்தை வெளிப்படுத்த முயன்றபோது அலிஸ்டர் குக்கை வெளியேற்றினார் ரகட் அலி. பலன்ஸ் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், வின்ஸ், பரிஸ்ரௌவ் இருவரும் சில நிமிட இடைவெளிகளில் பவிலியனுக்குச் சென்றனர். அரைச்சதம் கடந்தார் பலன்ஸ். 70 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் ஜாசீர் ஷா. பின்வரிசையைப் பலப்படுத்தினார் மொயின் அலி. அவர் அரைச்சதம் கடந்தாலும், மறுமுனை பலவீனமாக உணரப்பட இங்கிலாந்து, 297 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக சொகைல் கான் 5 இலக்குகளையும், ஆமிர், அலி இருவரும் தலா இரு இலக்குகளையும், ஜாசீர் ஷா ஓர் இலக்கையும் வீழ்த்தினார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக். 5

*வொலிகிங்ஸ் வி.க. தொடர்*

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில், இரவு 7 மணிக்கு அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணியும், இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி 'பி' அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வொரியஸ் அணியும், இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி 'ஏ' அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணியும் மோதவுள்ளன.

*பாரதி வி.க. தொடர்*

பொலிகண்டி பாரதி விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில், கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணியும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணியும் மோதவுள்ளன. (ம-108)

# அன்ரனிஸ் அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 5

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். அன்ரனிஸ் வெற்றிபெற்றது.

இருதயராஜா வி.கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அம்பிகைநகர் சிறி மகேஸ்வரி அணி மோதியது. இதில் சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கோலியைக் கணிக்காத கபில் தேவ்

இந்திய அணியின் டெஸ்ட் தலைவரான கோக்லியின் தலைமைத்துவத்தை தன்னால் இதுவரை கணிக்க இயலவில்லை எனத் தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவரான கபில் தேவ்.

கோக்லி தொடர்பாக பல ஜாம்பவான்களும் பலவிதமான கருத்துக்களை தெரிவிக்கின்றமை, மிகவும் பெருமையாக உள்ளது. ஆனால், இன்றுவரை அவரின் தலைமைத்துவத்தை பற்றி என்னால் கணிக்க இயலவில்லை. ஒருநாள் ரி-20 தொடர்களில் கோக்லி தலைவராக இல்லை. ஐ.பி.எல். தொடரில் அவரது செயற்பாட்டை வைத்து அவரின் தலைமைத்துவத்தை கணித்துவிட முடியாது. டெஸ்ட் தொடரில் மூன்று தொடர்களில் சிறப்பாகச் செயற்பட்டதை வைத்து கோக்லி சிறந்த தலைவர் என்று கூறிவிட வேண்டாம். இன்னும் சில தொடர்கள் சென்ற பிற்பாடு கோக்லியின் தலைமைத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என கபில் தேவ் மேலும் தெரிவித்தார். (ம)

# வொலிகிங்ஸ் வி.கழக கரப்பந்தாட்டம்; சீமா, கலைமதி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 5

வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சீமா, கலைமதி அணிகள் வெற்றி பெற்றன.

முதலாவது ஆட்டத்தில் சீமா அணியை எதிர்த்து பளை மத்திய கல்லூரி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:15 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றியது சீமா அணி. இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றிய பளை மத்திய கல்லூரி அணி. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய சீமா அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில், கலைமதி அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதியது. முதலிரு செற்களையும் முறையே 25:17, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய புத்தூர் கலைமதி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# பாடும்மீன், கில்லறி அணிகளுக்கு எவரெஸ்ட்டின் தொடரில் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 5

எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பாடும்மீன், கில்லறி அணிகள் வெற்றிபெற்றன.

எவரெஸ்ட் கழகத்தின் மைதானத்தில் மாலை 6.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து திருக்குமரன் அணி மோதியது. ஆட்டத்தில் ஆரம்பம் முதல், ஆதிக்கம் செலுத்திய பாடும்மீன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# அன்ரனிஸ், உதயதாரகை அணிகள் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், ஓக. 5

விக்னேஸ்வரா வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மன்னார் சென். அன்ரனிஸ், கிளிநொச்சி உதயதாரகை அணிகள் வெற்றிபெற்றன. விக்னேஸ்வராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தொடரில் களமிறங்கும் நடால்

ரியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பதை உறுதிசெய்தார் ஸ்பெய்னின் நட்சத்திர ரென்னிஸ் வீரரான ரபேல் நடால்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நாளை ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் நடால் பங்குபற்றுவதில் தொடர்ந்தும் சந்தேகம் நிலவிவந்த நிலையில் நேற்று அவர் தனது பங்குபற்றலை உறுதிசெய்தார். ஒலிம்பிக் தொடராக இல்லாவிட்டால், மணிக்கட்டுக் காயத்துடன் இந்த நிலமையில் விளையாட கூடுதல் முயற்சி எடுத்திருக்க மாட்டேன். வலி இருந்தாலும் கடந்த இரண்டு நாள்களாக 6 மணி நேரம் பயிற்சி எடுத்தேன். காயம் மேலும் தீவிரமாகவில்லை என்பது நல்ல செய்தி. லண்டன் ஒலிம்பிக்கை நான் ஏற்கனவே தவறவிட்டேன். எனவே, இந்தமுறை ஆண்கள் ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் என மூன்று பிரிவுகளிலும் விளையாட முடிவு செய்துள்ளேன் என நடால் மேலும் தெரிவித்தார். (ம)






# ரியோ ஒலிம்பிக் இன்று ஆரம்பம்

பிரேஸிலின் ரியோ டி ஜெரினோ நகரில் 31 ஆவது நவீன ஒலிம்பிக் தொடர் இன்று (நாளை) கோலாகலமாக ஆரம்பமாகிறது. ரியோ நகர நேரப்படி ஓகஸ்ட் 5 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி இது ஓகஸ்ட் 6 ஆம் திகதி அதிகாலை 4 மணியாகும்.

நடப்பு வருட ஒலிம்பிக் தொடரில் மூன்று விடயங்கள் பெரிதும் பேசப்படுபவையாக அமைந்துள்ளன. முதலாவது, ரஷ்ய நாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை. 2008, 2012 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர்களில் ரஷ்யாவின் சார்பாக களமிறங்கிய வீரர், வீராங்கனைகளில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாகவும், இதற்கு அந்த அரசு உடந்தை எனவும் தெரிவித்து ரஷ்ய அணிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது, ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை நடைபெற்ற தொடர்களில் அகதிகள் பங்கேற்பதில் பெரும் சிக்கல்கள் நிலவின. ஆனால் இம்முறை அகதிகள் அணி என்ற ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் 10 வீர, வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஒலிம்பிக் கொடியின் கீழ் களமிறங்குவர்.

மூன்றாவது, போல்ட், கேத்லின் இருவருக்கும் இடையிலான மோதல். ஜமைக்காவின் உசைன் போல்ட், அமெரிக்காவின் ஜஸ்ரின் கேத்லின் இருவருக்கும் இடையில் யார் குறுந்தூர ஓட்டப்பந்தய ஜாம்பவான்கள் என்பதை நிரூபிப்பதில் கடும்போட்டி நிலவுகிறது. எனவே இவர்களுக்கு இடையிலான மோதல் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-ரி4)

# விலகினார் வில்லியர்ஸ்

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து காயம் காரணமாக வில்லியர்ஸ் மற்றும் மோர்கல் இருவரும் விலகியுள்ளனர்.

டெஸ்ட் ஆட்டங்களில் தென்னாபிரிக்காவின் அணித் தலைவராக வில்லியர்ஸ் செயற்பட்டு வந்தார். இவரது விலகலையடுத்து பிளாசிஸ் தற்காலிகத் தலைவராக பெயரிடப்பட்டுள்ளார். வேகப் பந்துவீச்சாளரான மோர்கலின் விலகலும் அணிக்குப் பாதிப்பை ஏற்படுத் தும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஸ்ரெய்ன் உடற்தகுதி பெற்று அணியில் இணைந்துள்ளமையால் பந்துவீச்சு வரிசையில் தளம்பல் இருக்காது.

தென்னாபிரிக்க அணி – பிளாசிஸ் (தலைவர்), கைல் அபொட், அம்லா, டெம்பா பவுமா, ஸ்ரீபன் குக், குயின்டன் டி ஹொக், ஜெ.பி.டுமினி, டீன் எல்கர், கிறிஸ் மொறிஸ், வெய்ன் பார்னல், பிளண்டர், பீடிட், கஜிஸ்கோ ரபடா, டேல் ஸ்ரெய்ன், ஸ்ரி யான் வான்ஸில். (ம)



## ஒலிம்பிக் பெண்கள் கால்பந்தாட்டம்: வெற்றியுடன் ஆரம்பித்தது பிரேஸில்



ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் கால்பந்தாட்டமொன்றில் தொடரை நடத்தும் நாடான பிரேஸில் வெற்றியுடன் ஆரம்பித்தது.

ஒலிம்பிக் தொடர்கள் இன்று (நாளை அதிகாலை) உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ள நிலையில் பெண்களுக்கான கால்பந்தாட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பிரேஸில் அணி 3:0 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது.

ஏனைய ஆட்டங்களில், சுவீடன் 1:0 என்ற கோல் கணக்கில் தென்னாபிரிக்காவையும், கனடா 2:0 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவையும், ஜேர்மனி 6:1 என்ற கோல் கணக்கில் சிம்பாப்வேயையும், ஐக்கிய அமெரிக்கா 2:0 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தையும், பிரான்ஸ் 4:0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவையும் வீழ்த்தின. (ம)



# இந்தியா - தீவுகள் ஆட்டம் சமநிலை




இந்தியா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மா னித்து 196 ஓட்டங்களில் சுருண்டது.

அதிகபட்சமாக பிளக் வூட் 62 ஓட்டங்களை யும், சாமுவேல்ஸ் 37 ஓட்டங்களையும், கும்மின்ஸ் ஆட்டமி ழக்காமல் 24 ஓட்டங் களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்தியாவின் சார்பில் அஸ்வின் 5 இலக்குகளை யும், இசாந் சர்மா, மொகமட் சமி இருவ ரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற் றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 500-9 என்ற நிலையிலிருந்தபோது ஆட் டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக லோகேஸ் ராகுல் 158 ஓட்டங்களையும், ரகானே ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களையும், சஹா 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக சேஸ் 5 இலக்குகளையும், கபிரியேல், பிஸ்சுவ, கோல்டர் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 304 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாய நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 48-4 என்ற நிலையில் ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று களமிறங்கியது. பிளக்வூட் 3 ஓட்டங்களுடனும், சேஸ் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இறுதிநாளுக்காகக் களமிறங்கினர்.

இணைப்பாட்டமாக 93 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இந்தியாவின் வெற்றி சந்தேகமாகியது.

63 ஓட்டங்களுடன் பிளக்வூட்டை வீழ்த்தினார் அஸ்வின். சேஸ் ஓர் முனை யில் நிலைத்துநிற்க இணைந்தார் டவ்ரிச். பந்துவீச்சில் 5 இலக்குகளைக் கைப்பற்றிய சேஸ், துடுப்பாட்டத்திலும் சதம் கடந்து அசத்தினார். டவ்ரிச் அரைச்சதம் கடந் தார்.

தீவுகள் 285 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையிலேயே ஆறா வது இலக்கு சாய்க்கப்பட்டது. 74 ஓட்டங்களுடன் டவ்ரிச்சை வீழ்த்தினார் மிஸ்ரா. சேஸ், கோல்டர் நாளின் முடிவுவரை தாக்குப் பிடிக்க தீவுகள் 388-6 என்ற நிலையிலிருந்த பொழுது ஆட்டம் சமநிலை யானது. சேஸ் 137 ஓட்டங் களு டனும், கோல்டர் 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கான

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி பிரதேச மாணவர்களின் பரீட்சை பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கௌரவ ஈ. சரவணபவன் அவர்களது வழிப்படுத்தலில் சரவணபவன் அறக்கட்டளை நடாத்தும் விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

**சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம்**
நாளை 06.08.2016
சனி மு.ப.8.30 - பி.ப. 3.30

**இக்கருத்தரங்கில்**

யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர் திரு.வே. அன்பழகன்
(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)
வவுனியா யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் திரு. என்.எஸ். தீபன்
(மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் திரு. S. பத்மநேசன்
(ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்)

**அனைத்து மாணவர்களும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகைதரவும்.**

சரவணபவன் அறக்கட்டளை — கருத்தரங்கு ஏற்பாட்டுக்குழு

---

இன்று முதல் ஆரம்பமாகின்றது
நுழைவு இலவசம்

**4 சர்வதேச கண்காட்சிகள்**
பிளாஸ்டிக் | இறப்பர் | பொதியிடல் | உற்பத்திகள்

ஆகஸ்ட் 5 - 7, 2016
BMICH கொழும்பு
நேரம்: மு.ப. 10.00 முதல் பி.ப. 5.30 வரை

SRI LANKA PLAST — 3rd Edition — INTERNATIONAL PLASTICS EXHIBITION — START | EXPAND | DIVERSIFY

RUBEXPO — INTERNATIONAL RUBBER EXPO — 2nd Edition — MATERIALS | MACHINES | TECHNOLOGY — SRI LANKA

Compack Sri Lanka — COMPLETE PACKAGING EXPO — FOR COMPLETE PACKAGING SOLUTIONS

ENMACH — 2nd Edition — ENGINEERING AND MACHINE TOOLS — International Manufacturing Expo — Sri Lanka

காட்சிப்படுத்தல்கள் 200+
நாடுகள் 10
இயந்திரங்கள் பற்றி நேரடி விபரித்தல்

**கொள்வனவு செய்திடுங்கள்
வர்த்தகம் செய்திடுங்கள்
முகவர் ஆகிடுங்கள்**

தொழிநுட்ப கருத்தரங்கு
**பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் தொழிற்துறை**
ஆகஸ்ட் 6, 2016 | பி.ப 2.00
செயற்குழு அறை - BMICH
பதிவுகளுக்கு கண்காட்சியின் PRISL பிரிவு

ஏற்பாடு: ENTERPRISING FAIRS INDIA — Creating opportunities | Delivering value

துணை ஏற்பாடு: PRI SRI LANKA — The Plastics & Rubber Institute of Sri Lanka

ஒத்துழைப்பு: EDB Sri Lanka Export Development Board | Industrial Development Board | Rubber Research Institute of Sri Lanka | The Plastics Export Promotion Council

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.